அபிநவ பத்திரிகை.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர்கள். { கு ரா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பி. ஏ.,
நா. ராமாநுஜாசாரியர், எம். ஏ., எல். டி.

[புத்தகம் 1.] நவம்பர் மீ 30உ [சஞ்சிகை 4.

சூசிபத்திரம்.

ம்ருச்சகடிகை ...டி எஸ் ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பி. ஏ., 161
சரீரகசாஸ்திரம் ...டி ஏ சோமநாதராவ், எம் ஏ., 196
வேதாந்தஸாரம் ...நா ராமாநுஜாசாரியர், எம் ஏ., எல். டி. 199
ஆழ்வார்களின் திருப்பதிகள் } ம ஸ்ரீநிவாஸ ஐயங்கார் 207
மகாதேவகோவிந்தரானடே } கு ரா ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பி. ஏ. 219
வியாபாரம். ...கிருஷ்ணசாமி ஐயர், பி. ஏ., 224
ஜப்பானிய அரசாட்சி மேன்மை } ரா ராஜமையங்கார், பி. ஏ., 230

சென்னை:

அபிநவ பத்திரிகை ஆபீஸ்,

85, நாராயணமுதலி வீதி.

1902

வருஷ சந்தா ரூ. 3-0-0.] [தனிப்பிரதி ரூ. 0-4-0

வேதாந்த ஸாரம்.

III

மேற் கூறியபடி, பிரத்தியக்ஷானுமானப் பிரமாணங்களுக்கு இசையாத அதீந்திரிய விஷயங்களைப்பற்றிச சாஸ்திரப் பிரமாணத்தை அங்கீகரிக்காவிட்டால், தத்வ சாஸ்திர விசாரணைக்கு வேறு வழியில்லையென்று நினைக்க வேண்டுவதில்லை. பிரத்தியக்ஷாதி யனுபவங்களுக்கு அனுகுணமாக, அதீந்திரிய விஷயங்களிலும், ஸதூஹம், அனுகூல தர்க்கம், லாகவ கல்பனை முதலிய பிரமாணங்களைக் கொண்டும், ஸ்வதஸ்ஸித்தமாக ஏற்படுகிற விஷயங்களைக்கொண்டும் தத்வ நிச்சயம் பண்ணக்கூடும். அவ்விதமாய் ஏற்படுகிற விஷயங்கள் துர்பலமான பிரமாணங்கள் வழியாய் ஏறபடுகிற படியாலும் கேவல கற்பிதங்களானபடியாலும், அவைகளை ஸத்தியமாக அங்கீகரிக்க கூடுமோ வென்றால்; அது வாஸ்தவம், ஆனால் கிஞ்சிக்ஞர்களான மனிதர்களுக்கு வேறு கதியில்லாதபடியினால், எந்த எந்தப் பிரமாணங்களால் எந்த எந்த விஷயங்கள் எவ்வளவுமட்டும் ஸித்திக்கின்றனவோ, அவ்வளவோடு திருப்தி யடைய வேண்டுவதல்லாது, வேறு வழியில்லை. ஆனால் அந்த மதஸ்தர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சாஸ்திரங்களை இந்த வியாஸத்தில் முற்றிலும் விலக்கவில்லை. அச்சாஸ்திரங்களால ஏற்படுகிற விஷயங்களையும், கற்பனைகளாகக்கொண்டு மேற்சொல்லிய பிரமாணங்களுக்கு அனுகூலமாயும், பிரத்தியக்ஷாதி யனுபவங்களுக்கு விரோதமன்றியும் இருந்தால், அவைகளும் பிரமாணார்ஹங்களாக ஒப்புக்கொள்ளப்படும்.

வேதாந்தமதத்தில் ஏற்பட்ட ஸித்தாந்தங்கள்மூன்றில் அத்வைதமென்று வழங்குகிற ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளுடைய மதம் எல்லாவற்றிற்தும் முந்தியதென்று முன்னே சொன்னோம். அம்மதம் ஏற்பட்டு சற்றேறக்குறைய 1200 வருஷங்களுக்கு மேலாகிறது. ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் காலம் கிறிஸ்த வாப்தம், எட்டாவது நூற்றாண்டென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இவர் கேரள தேசத்திற் பிறந்தவர். பால்யத்திலேயே ஞான வைராக்கியத்திற் பிரஸித்தியடைந்தவராய்க் கொண்டு, இல்லறத்தை மேற்கொள்ளாமல்

பதினாறு வயதில் துறவறம் பூண்டு, அது முதல் தம் வாழ்நாட்களையெல்லாம் கிரந்தங்கள் செய்வதிலும், பௌத்தாதி மதஸ்தர்களை கண்டித்து வேதாந்த மதத்தை பிரவசனம் செய்வதிலும், கழித்தனர். இவர், ஆரியாவர்த்தம், தக்ஷிணம் சேர்ந்த இத்தேசத்தைப் பல முறை சுற்றிப் பிரயாணம் செய்து, ஆங்காங்குள்ள பௌத்த ஜயினிகளை ஜெயித்தும், வேதாந்த மதத்தை அபிவிருத்தி செய்ய அங்கங்கே சங்கர பீடங்களென்று வழங்குகிற மடங்களை ஸ்தாபித்தும், இம்மாதிரியாக இன்னும் வேதாந்த மதாபிவிருத்திக்காக அவர் செய்திருக்கிற காரியங்கள் பலவுள. இதுவும் தவிர, சைவம் வைஷ்ணவம் முதலான ஆறு மதங்கள் வேதாந்தத்திற்கு விரோதிகளல்லவென்றும், வைதிக சம்மதம்பெற்றவைகளென்றும், உபாஸனாப் பிரயுக்தமாக வேதாந்த மதத்தின் உண்மைகளையே, வெவ்வேறு விதமாக வெவ்வேறு பரிபாஷையில் வியவஹரிக்கின்றனவென்றும், ஸ்தாபித்திருக்கிறபடியினாலே இவருக்கு ஜகத்குரு என்றும், ஷண்மதஸ்தாபனாசாரியரென்றும், பிருதுக்கள் வழங்கி வருகின்றன. இப்படி வேதாந்த மதத்திற்காக மிகவும் பரிசிரமப்பட்டு, முப்பத்தாறு வயதிலேயே ஸ்வாநுபூதியை யடைந்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவருடைய மதத்தில் முக்கியமான பாகங்கள் இரண்டு; அத்வைதவாதம், மாயாவாதம். இவைகளில் அத்வைதமாவது ஞாதரு ஞேய ஞான ரூபங்களாய்ப் பலவாகத் தோற்றுகிற இந்தப் பிரபஞ்சத்திற்கு மூல பூதமாயும் ஆதாரமாயும் இருக்கிற வஸ்து ஒன்றே. அதுவே ப்ரம்மம என்று சொல்லப்படும். அது நித்தியமாயும் நிர்குணமாயும் அகண்டமாயும் ஸச்சிதானந்தஸ்வரூபமாயும் உள்ளது இது கேவலம் சைதந்ய ஸ்வரூபம் (ஞானஸ்வரூபம்) ஆனபடியால், நிர்குணமென்றும், அஜடஸ்வரூபமாதலால் சித் என்றும், வஸ்துரூபமாதலால் ஸத் என்றும் சுக துக்காதிகளுக்கு அதீதமானதால், ஆநந்தமென்றும், வியவஹரிக்கப்படுகின்றது. ஸச்சிதாதி சப்தங்கள் ப்ரம்மமாகிற அவ்வஸ்துவின் குணங்களை காட்டுகின்றனவல்ல; அதின் ஸ்வரூபத்தை நிர்தேசிக்கின்றன; அந்தப் ப்ரம்மமாகிற சுத்த சைதந்யமதான் வஸ்து. பிரபஞ்சம் அவ்வஸ்துவினிடத்தில் கற்பிதம். இந்த கற்பிதமான பிரபஞ்சத்திற்கு அதின் ஸ்வரூபமாகிற சைதந்ய நிமித்தத்தினாலேயே வஸ்துத்வ முண்டாகிறதே யொழிய, அந்த சைதந்ய வியதிரிக்தமாக ஜகத்துக்கு ஸத்யத்வ (இருக்கை) மென்பது இல்லை

இந்த சுத்த சைதந்யத்தின், அதாவது வஸ்துவின் சக்திக்கு மாயை என்று பெயர். இதுதான் திருசியமான ஜட பிரபஞ்சத்தின் மூலகாரணம். ஸ்ரீ சங்கராசாரியர் குணகுணிகளுக்கு அபேதம் ஒப்புக்கொண்டிருக்கிற படியால், சக்தியாகிற பிரபஞ்சத்திற்கும், சக்திமத்தாகிறபிரமத்திற்கும் ஐக்கியம் சொல்லுகிறதே ஒழிய, இந்த ஜகத்து பார்க்கிறபடியே ப்ரம்மம் என்று அத்வைதத்தில் சொல்லுகிறதில்லை. ஜடப்பிரபஞ்சத்திற்கு மூலகாரணமாகிற இந்த மாயா சக்தியவச்சின்ன சைதந்யத்திற்குத்தான் ஈசுவரனென்று பெயர். இந்த மாயை அல்லது பிரமம சக்தியின் முதலவஸ்தையாகிற பிரகிருஷ்ட ஸத்வத்தை உபாதியாக உடையவனானபடியால், ஈசுவரனுக்கு ஸர்வக்ஞத்வாதி குணங்கள் உண்டாகின்றன. ஆகையா லிப்பிருகிருஷ்ட ஸத்வோபாதிகனான ஈசுவரனுக்கு சகுணப் பிரம்மமென்று பெயர். இவன்தான் ஸர்வலோக கர்த்தாவாகவும், ஸர்வலோகத்திற்கும் நியந்தாவாகவும் அந்தர்யாமியாகவும், ஆதி குருவாகவும் விளங்குகிறான்.

ஜடவஸ்துக்க ளிடத்தில் தோற்றுகிற வஸ்துத்வமும் சைதந்ய ஸ்வரூபமாகிற பிரமம் தான். இந்த ஸர்வசாதாரணமாயிருக்கிற சுத்த சைதந்யம், மனுஷியனிடத்தில் மூன்று விதமாக விளங்குகிறது. அவையாவன:—அந்தக்கரண வச்சின்ன சைதந்யம், விருத்தியவச்சின்ன சைதந்யம், விஷயாவச்சின்ன சைதந்யம். இந்த அந்தக்கரண வச்சின்ன சைதந்யம் தான் தேகத்தில் நான் என்று வியவஹரிக்கிறது. இதற்கு ஜீவன் என்று பெயர். ஆசாரிய சிஷ்ய பந்த மோக்ஷாதி வியவஸ்தைகள் இந்த ஜீவனைப்பற்றி உண்டாகின்றன. சுகதுக்க ஞானாதி ஆந்தர விருத்திகளில் தோற்றுகிற சைதந்யம், விருத்தி யவச்சின்னமென்றும், பாஹ்ய இந்திரியங்களாலே காண்கிற விஷயங்களில் தோற்றுகிற சைதந்யம், விஷயாவச்சின்ன சைதந்யமென்றும்சொல்லப்படுகிறது. ஆகவே நித்யமாயும், அநந்தமாயுமுள்ளது சுத்த சைதந்யம் ஒன்றே. அது மாயையின் அவஸ்தாபேதங்களாலே பலவாறாகத் தோற்றுகின்றது. ஆகையால் தேவமனுஷியாதி ஆகார பேதங்களில் விளங்குகிற சைதந்யங்களுக்கும், பிரம்மத்திற்கும் ஐக்கியம் சொல்லுகிறபடியால், இதற்கு ஜீவபிரம்ம ஐக்கிய வாதமென்றும் அத்வைத வாதமென்றும் பெயர்.

மாயாவாதமென்பது, ஜீவன்களுக்குப்பிரம்ம சைதந்யத்துடன், அத்வைத வாதத்தில் ஐக்கியம் சொன்னதன்பேரில் த்ருச்ய ப்ரபஞ்சத்திலுள்ள ஜட வஸ்துக்களுக்கு பிரம்ம சக்தியாகிற மாயையினிடத்தில் ஐக்கியம் சொல்லுகிறது. இந்த மாயைக்குத்தான் மூல பிரகிருதியென்றும் பெயர். இதனுடைய அனந்த அவஸ்தா பேதங்களால் பிரபஞ்சத்தில் நானாரூபமான வஸ்துக்கள் உண்டாகின்றன. இவ்வஸ்துகளடங்கிய பிரபஞ்சம் தனக்கு அதிஷ்டானமான சைதந்யத்திற்குவேறாக ஸித்திக்கிறதில்லை. ஆகையால் சைதன்ய வ்யதிரிக்தமாக ஜகத்திற்கு ஸத்பத்வமில்லை. இதுகாரணம்பற்றியே, ஜகத்து, மித்யை என்று சொல்லுகிறதே யொழிய, அத்வைத மதத்தில் ஜகத்தைப் பொயயென்றாவது இல்லையென்றாவது சொல்லவில்லை. அப்படியல்லாமல், ஜகத்தைப் பொய்யென்றாவது, இல்லையென்றாவது, அர்த்தம் கொண்டால், இந்த ஜகத்து எல்லாம் பிரமமம் என்று அத்வைதத்தில சொல்லுகிற இடங்களிலெல்லாம விரோதம் ஸம்பவிக்கும். ஆதலால் ஜகத்துக்கு, பிரம்மத்துக்குப் பிரதக்காக மித்யத்வம் கொள்ளவேண்டுமே யொழிய, பிரம்மாதிஷ்டான காரணம் பற்றி ஸத்யத்வம் உண்டாகக் குறையில்லை.

இப்பொழுது இந்த ஞாதாருஞேய ஞானரூபமான பிரபஞ்சத்திற்கு மூலகாரணங்களாக இரண்டு ஏற்படுகின்றன. சைதந்ய மொன்று; மாயையொன்று. ஆதலால் அத்வைத மெப்படி ஸித்திக்குமென்றால்:—அதற்குக் காரணங்களுண்டு. மாயையானது பிரம்மத்தினுடைய சக்தியானபடியினாலேயும, சக்தி சக்திமத் இரண்டிற்கும் அபேதம் இம்மதத்திற் கொள்ளுகிறபடியினாலேயும், பிரம்மத்திற்கும் மாயைக்கும் ஐக்கியம் சொல்லலாம். மேலும்மாயையானது வியவஹார தசையில் பிரமமத்தினிடத்தில் தோற்றி, பிரளயா வஸ்தையில் அதனிடத்தில் லயிக்கிறபடியினாலேயும், பிரமத்திற்கு வேறாக அதற்கு அஸ்தித்வ மில்லாத படியினாலேயும் பிரமத்திற்கும் பிரபஞ்ச காரணமாகிற மாயைக்கும் ஐக்கியம் சொல்லக்கூடும். ஆகையாலே இம்மதத்தில் ஈசவர நிஷேதமாவது ஜீவநிஷேத மாவது பிரபஞ்ச நிஷேதமாவது செய்யவில்லை யென்பது நன்றாய் விளங்கும். இதற் கனுகுணமாக ஸ்ரீ பாகவதம் முதல் சுலோகத்தின் வியாக்கியான அவசரத்தில் ஸ்ரீதரஸ்வாமிகள் எழுதியிருக்கிறார். "பிரமம்

என்பது வஸ்து; ஜீவன்கள் பிரம்மத்தின் அம்சங்கள்; மாயை யென்பது பிரம்ம சக்தி." இது காரணம்பற்றியே அவைகளுக்கு ஐக்கிய வாதமும், வஸ்து ஏகத்வவாதமும் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளுடைய பாஷ்யாதி கிரந்தங்களையும் பரிசீலனம் பண்ணி, பூர்வா பரவிரோதமின்றி ஐகைகண்டியம் செய்து யோசித்தால் மேற்சொன்னது தான் அத்வைத வாதமே யொழிய, இப்போது பலபேர் பலவாறாக போதித்து வழங்குவது வேதாந்த அத்வைத மல்லவென்பது நன்ருய் விளங்கும்.

நித்திய சுத்த முக்த சுவாபமாயுள்ள பிரம்மமாகிற அகண்ட சைதந்யமே அந்தக்கரண வச்சின்னமாய் ஜீவனென்று வியவஹரிக்கப்படுகிறதென்று முன்னே சொன்னோம். இது காரணம்பற்றி ஜீவன் பிரம்மனுக்கு அம்சமென்று சொல்லப்படுகின்றது. அம்சமென்றால் பிரம்மத்திலிருந்து வேறாய் பிரிக்கப்பட்ட ஒரு பாகமென்று தாத்பரியமில்லை. அகண்ட சைதந்யத்தினுடைய ஐக்கிய சம்பந்தத்தை விடாமலே, கடாகாசம் மகாகாசத்தை விட்டு வேறாய் தோற்றுவதுபோல, அந்தக்கரணமாகிற உபாதியினாலே வேறுபட்டதாய் வியவஹார தசையில் தோற்றுகிறது என்பது தாத்பரியம். அந்த உபாதி நீங்கினாலே கடம் உடைந்தபின் கடாகாசமென்று வியவஹாரம்பெற்ற ஆகாசாம்சமும் மகாகாசமும் ஒன்றுவதுபோல, ஜீவ சைதன்யம் தன் ஸ்வரூபமாகிற அகண்ட சைதந்யத்தோடு ஒன்றுபடுகிறது. கடாகாசம் படாகாசம் என்று வியவஹரிக்கப்படுகிற ஆகாசாம்சங்கள் ஒவ்வொன்றும் அகண்டா காசத்துடன் அத்தியந்த ஐக்கியமில்லாமல், அதின் பிரதி நியதாம்சமாயிருப்பது போல, ஜீவன்களும் ஒன்றோடொன்று ஸ்வரூபைக்கியமின்றி, அகண்ட சைதந்யத்தின் பிரதி நியதாம்சங்களாகக் கடவன. இங்கே ஐக்கிய சப்தத்திற்கு அம்சங்கள் ஒன்றைவிட்டொன்று வேறுபாடில்லாமல், ஒன்றுபட்டு இருப்பதில் தாத்பரியமே ஒழிய, அம்சத்வத்தின் அத்தியந்தா பாவத்தில் தாத்பரியமில்லை. இல்லாவிடில், ஜீவன்களுக்கு பந்தமோக்ஷாதி வியவஸ்தைகளும், ஆசார்ய சிஷ்யாதி வியவஸ்தைகளும், சாஸ்திர வச்யதையும், ஸுகதுக்காதி வியவஸ்தைகளும் ஒன்றும் ஸித்தியாமலும் சாஸ்திர உபதேசத்திற்கும் மோக்ஷாதிக

னுக்கு பண்ணுகிற பிரயத்தனத்திற்கும் பலனில்லாமலும், ஆத்ம நாசமே மோக்ஷமாகப் பிரசங்கிக்கும.

பிரம்மத்திற்கும் ஜீவனுக்குமுள்ள ஸம்பந்தத்தைப்பற்றி மேலே சொன்னதிற்கு அவச்சின்ன வாதமென்று பெயர். அத்வைதிகளில் சிலர் அதை ஒப்புக்கொள்ளாமல் வேறு அபிப்பிராயப்படுகிறார்கள். பிரமமத்தை பிம்பமாகவும, ஜீவனை பிரதிபிம்பமாகவும் கொண்டு, அந்தக்கரணங்கள பலவானதால், பிம்பஸ்தாநியாகிற பிரம்மம் அவைகளில் பிரதிபலிக்கிறபோது பலவாகத் தோற்றுகிறதென்பர். இவர்களுக்கு பிம்பப் பிரதிபிம்பவாதிகளென்று பெயர். இம்மதத்தில் பிரதிபிம்பகளாகிற ஜீவன்கள் மித்யையாகிற படியாலே, உபாதி நிவிருத்தியானபிறகு, பிரதிபிம்பம் நசிக்கிறதுபோல ஜீவனுக்கும் ஆத்மநாசமே மோட்சமாகத் தலைக்கட்டும். பிரம்மமே உபாதியுள்ளபோதும், உபாதி யில்லாத பொழுதும், நித்யமாய் விகாரமன்னியிலிருக்கிறபடியால், மோட்சப் பிரயத்னத்திற்கும், சாஸ்திராப்பியாசம் முதலிய தத்வ விசாரணைக்கும் அதிகாரியில்லாமல், ஜீவநாசமே புருஷார்த்தமாக முடியும். ஆனால் சாஸ்திரங்களில் இந்த உபமானம் சிற்சில இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விடங்களில் எப்படி ஜலத்தில் தோற்றுகிற சூரியனுடைய பிரதிபிம்பங்களிலுள்ள குற்றங்கள் உபாதிப் பிரயுக்தமே யொழிய, பிரதிபலிக்கப்படுகிற சூரியனிடத்தி லில்லாததுபோல, ஆத்மாவிடத்தில் தோற்றுகிற சுக துக்காதி தோஷங்கள், அதின் ஸ்வரூபப் பிரயுக்த தோஷங்கள் அல்ல என்பது தாத்பரியம்.

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் தான்செய்த பாஷ்யாதி கிரந்தங்களில், வெவ்வேறு இடங்களில், மேற்சொன்ன இரண்டுவித சம்பந்தங்களையும் பற்றி எழுதியிருக்கிறார். ஆனால் அந்த இரண்டு அபிப்பிராங்களும் அவர் பின்னோர்கள் செய்ததுபோல பரஸ்பர விருத்தமாக எண்ணி எழுதியிருக்க கூடாது. அவைகள் ஒன்றுக்கொன்று விரோதியாமல் அர்த்தம் செய்வது நியாயமே யொழிய, அவைகளைக்கொண்டு, இரண்டுவித வாதங்களிலும் அவருக்கு தாத்பரிய மென்பது சரியல்லவென்று தோற்றுகிறது.

இதுவும் தவிர, அவர் காஸ்த்திலேயே அத்வைதிகள் சிலர் ஜீவோபாதி நித்யமென்றும், அதினால், உபாத்தியவிச்சின்ன ஜீவனும், எப்பொழுதும் அழிகிறதில்லையென்றும், அபிப்பிராயப்பட்டார்களென்று அவர் பாஷ்யத்தினாலே வெளியாகிறது ஸ்ரீ சங்கர பாஷியத்தில் ஜீவனைப்பற்றிய சூத்திரவியாக்கியானத்தில், "நம்மவர்களில் சிலர், இந்த ஜீவன் நித்தியனென்று சொல்லுகிறார்கள்" என்று அவர் எழுதியிருக்கிறார். ஆகையால் சில அத்வைதிகள், ஜீவோபாதி நித்தியமானதால், ஜீவன், முக்தி தசையிலும் பிரம்மத்திற்கு வேறாகவும் தோற்றமென்று கொண்டார்களென்பது நிச்சயம்.

இம்மதத்தில் பரமபுருஷார்த்தம் நிர்குணமோக்ஷம். நிர்குண மோக்ஷமாவது, ஸ்வஸ்வரூபமாயும், ஸர்வாதிஷ்டானமாயு மிருக்கிற, நித்ய, சுத்தமுக்தஸ்வரூபமான சைதன்ய ஸாக்ஷாத்காரம். முன்னால் சொல்லப்பட்ட, விஷயாவச்சின்ன சைதந்யம், விருத்தியவச்சின்ன சைதந்யம், அந்தக்கரணாவச்சின்ன சைதந்யம், இவைகளுக்கும், சுத்த புத்த முக்த சுவபாவமாயுள்ள, சுத்த சைதந்யத்திற்கும் ஐக்கியானு ஸந்தானத்தாலே, ஸ்வஸ்வரூபமாகிற சுத்த சைதந்யம் ஸ்வாநுபவமாகிறது. அவ்விதஸ்வானுபவ சைதந்ய ஸாக்ஷாத்காரந்தான் முக்தியென்பது சொல்லப்படுகிறது. அவித்தியாகல்பிதமான பிரபஞ்சத்தில் அர்த்தப் ப்ரமத்தைவிட்டு, அசேஷ விசேஷ ரஹித சுத்த சைதந்யமாயும், நித்யமுக்த ஸ்வபாவமாயும், ஸர்வத்திற்கதிஷ்டானமாயுமிருக்கிற சுத்தசைதந்யத்திற்கும், கேவலம் அஹமார்த்தமாகிற ஜீவசைதந்யத்திற்கும் ஐக்கியானுஸந்தானம், செய்து சுத்த சைதந்ய ஸாக்ஷாத்காரமுண்டானால் அதற்குதான் நிற்குணமோக்ஷமென்று பெயர். இந்த மோக்ஷம், பஹுகாலம் நிரந்தரமாய் அனுஷ்டிக்கப்பட்ட அப்பியாஸ வைராக்கியத்துடன் கூடிய ஞானயோகத்தாலே சாத்யமாகும். இந்த மோக்ஷத்தில் அடையப்படுகிற தேசமாவது, வஸ்துவாவது ஒன்றுமில்லை. அவித்யா நிவிருத்தியும், ஸ்வஸ்வரூபானுபவமும தான்.

சகுணமோக்ஷமென்பது இதற்கு சற்றுக் குறைந்தது. இதில் ஸ்வஸ்வரூபானுபவமும், நித்யத்வமுமில்லை. அணிமாதி ஐசுவர்யங்களாலேயும். துக்கலேசமில்லாத சுகானுபவத்தாலேயும், வியவஹாரதசையில ஸர்வோத்கிருஷ்டமானதால் இதற்கும் மோக்ஷமென்று வியவஹாரம். நிர்குணமோக்ஷத்திற்கு அடுத்தபடியாதலாலும்,

இதிலிருந்து, பாரமார்த்திகமாகிற நிர்குணமோக்ஷம் அடைவது சுலபமானதாலும், இதற்கும் மோக்ஷமென்று பெயர். இது கர்மயோக ஸஹித உபாஸனாப் பிரயுக்தமானது. உபாஸநமாவது பக்தியோகம். பலாபேக்ஷயன்னியில் வர்ணாசிரமாதிகருமங்களைச் செய்து, ஸர்வக்ஞாதிகுணங்களால் பரிபூர்ணனான ஈஸ்வரனை பக்திசெய்து, அவனுடைய கிருபாவசத்தாலே இந்த தேகத்தைவிட்டு, திவ்ய தேகத்தோடு பிரம்மலோகத்தையடைந்து, ஈஸ்வரஸமமான குணங்களைப்பெற்று புனராவர்த்தியில்லாமல், இருக்கைக்கு ஸகுணமோக்ஷமென்று சொல்லுகிறது. இதற்கு அந்தமுண்டு!—இந்த மோக்ஷமடைந்தவர்கள் இரண்டு பரார்த்தத்திற்குப் பிறகு, பிரம்மலோகத்திற்கு அத்தியக்ஷனையும், காரியபிரம்மமென்றும் வழங்குகிற ஈஸ்வரனோடுகூட, மஹாப்பிரளயத்தில் சுத்த பிரம்மத்தில் லயித்து நிர்குண முக்தியை யடைவார்கள். இதுதான் அத்வைத மதத்தின் சங்கிரகம். இதின் குணதோஷங்களைபற்றியும், நியாயரீதியைப் பற்றியும் விசதமாய்ப் பின் விசாரிப்போம்.

நா. ராமானுஜாசாரியர்.

நூற்றெட்டுத் திருப்பதிகள்.

சோழநாட்டுத் திருப்பதிகள்.

ஸ்ரீரங்கம். 1.

திருவரங்கம் பெரியகோயில், ஸ்ரீரங்கநாதன் - நம்பெருமாள்; ஸ்ரீரங்கநாச்சியார்; ப்ரணவாக்ருதி விமானம்; வேதச்ருங்கம்; காவேரிநதி; சந்திரபுஷ்கரணி; புன்னைவிருக்ஷம்; புஜங்கசயனம்; தெற்கே திருமுகமண்டபம்; தர்ம வர்மாவுக்கும் ரவிதர்மனுக்கும் ப்ரத்யக்ஷம்; பொய்கையார், பேயார், பூதத்தார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

ஆதிகாலத்தில் ஸ்ரீரங்கநாதனை ப்ரஹ்மா ஆராதித்து வந்ததாகவும், பிற்பாடு சூரியகுலத்தரசனாகியஇக்ஷ்வாகு மஹாராஜன் தவஞ்செய்து அவரைப்பெற்று திருவயோத்தியில் சந்நிதிகட்டி அர்ச்சித்ததாகவும், இப்பால் இக்ஷ்வாகு சந்நிதியில் ஜனித்த ஸ்ரீமன் விபீஷணாழ்வானுக்கு ஸ்ரீரங்கனாதனை ப்ரணவாக்ருதி விமானத்தோடுகொடுத்ததாகவும், அவர் அதை யெடுத்துக்கொண்டு இலங்கைக்குச் செல்கையில் காவேரி தீரத்தில் உறையூரில் சோழமகாராஜராகிய தர்மவர்மன் பிரார்த்தித்தபடி உபய காவேரி மத்தியில் சந்திர புஷ்கரணி தீரத்தில் எழுந்தருளினதாகவும், இந்தப்ரதேசம் அதிரமணீயமாயிருப்பதைக்கண்டு, இலங்காபுரிக் கெழுந்தருள ரங்கநாதனுக்குத் திருவுள்ளமில்லாது போயிற்றென்றும், அதனால் ஒவ்வொரு வருஷமும் ஸ்ரீரங்கத்துக்குவந்து நம்பெருமாளை விபீஷ்ணா ஆராதித்து வருவதாகவும் புராணவரலாறு.

அன்றியும், ஸ்ரீமந்நாதமுனிகள், முதல் மணவாள மாமுனிகள் வரையுள்ள ஆசாரியர்கள் சிலராலும் மங்களாசாஸனம் பண்ணப்பெற்ற ஸ்தலம் பூலோகவைகுந்தமென்று சொல்லப்படும். இந்த க்ஷேத்திரத்தில் இளையாழ்வாராகிற ஸ்ரீ பாஷ்யகாரர் சைவர் சமணர், சாக்கியர் என்ற பாஷண்டிகளுடன் வாதுசெய்து விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தைத் தலைக்காட்டிக்கொண்டு 74–ஆசார்ய புருஷர்களாலும் 700 ஜீயர்களாலும் 10.000 ஸ்ரீவைஷ்ணவர்களா

னும் ஸேவ்யமான்ராய் ஸீலாபூதியில்லுள்ளவரை எழுந்தருளியிருந்தார். பிற்பாடு மணவாளமாமுனிகள் ஆயிரக்கால் மண்டபத்தில் ஈடு முப்பத்தாறாயிரம் ப்ரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில், நம் பெருமாளே சிறுகுழந்தை வடிவமாய் வந்து திருவோலக்கத்தில் 'ஸ்ரீஸைலேஸம்தயாபாத்ரம்' என்ற தனியனைச் சாதித்ததும் இந்த ஸ்தலத்தில்தான்.

சேரர்கோனும் அருகசமயத்தவருமான இளங்கோவடிகள் ரங்கநாதனைப்பற்றி "நீலமேக நெடும்பொற் குன்றத்துப் பால்விரிந்தகலாதுட்டிந்ததுபோல, வாயிரம் விரித்தெழுதலையுடைய ருந்திறற், பாயற்பள்ளிப்பலர் தொழுதேத்த, விரிதிரைக் காவிரிவியன்பெருந்துருத்தித், திருவமர் மார்பன் கிடந்தவண்ணமும்." என்றுராகலின் ஸ்ரீரங்கம் சகஹ 100-லும் மிகப்ரஸித்தமான திவ்யதேசமாகவிருந்ததாயிற்று.

திருக்குடந்தை (2)

ஆராவமுது; சார்ங்கபாணிப்பெருமாள்; கோமளவல்லி; வைதிக விமானம்; ஹேமபுஷ்கரணி; கிழக்கே திருமுகமண்டலம்; உத்யோக சயனம்; ஹேமமகர்ஷிக்கு ப்ரத்யக்ஷம்; பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

இந்தஸ்தலம் உரையூருக்குப்பின் சோழதேசத்துக்குத் தலைமை நகராயும அதிக ப்ரஸித்தமாயு மிருந்ததுபற்றிப் பூதம் முதல் சடகோபன்வரையுள்ள ஆழ்வார்கள் எழுவரால் மங்களாசாஸனம் பண்ணப்பட்டது. இவ்வூரில் 'ஆராவமுதே' என்ற திருவாய்மொழியைச் சந்நிதியில் சேரிக்கக்கேட்ட ஸ்ரீமந்நாதமுனிகள் திருவாய்மொழி முழுமையும அங்குக்கிடைக்கப் பெறாமையின் குருகூர்க்குச்சென்று நம்மாழ்வாரிடம் 4000 ப்ரபந்தத்தைப் பெற்று லோகத்திற்கு ப்ரசாதித் தருளினர்.

திருமழிசை யாழ்வார இவ்வூரில் திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

திருக்கண்ணபுரம். (4)

சௌரிராஜப்பெருமாள்; கண்ணபுரி நாயகி; உற்பலாவர்த்தகவிமானம்; நித்யபுஷ்கரணி; கிழக்கே திருமுகமண்டலம்; நின்ற திருக்

சோலம்; கண்வமாமுனிக்கு ப்ரத்யக்ஷம், திருமங்கையாழ்வார், குல சேகராழ்வார், பெரியாழ்வார், நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

திருப்பேர்நகர் (3)

அப்பக்குடத்தான்; கமலவல்லித்தாயார்; இந்திரவிமானம்; இந்திர தீர்த்தம்; மேற்கே திருமுகமண்டலம்; புஜங்கசயனம்; வலது அஸ்தத்தின்கீழே குடம்; இந்திரகிரி; உபமன்யுவுக்கும், பராசாருக்கும் ப்ரத்யக்ஷம்; திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

இருவாலி (5).

வல்லாலி மணவாளன்; அமரர்தகடவல்லி நாச்சியார்; அஷ்டாக்ஷரவிமானம்; இலாக்ஷணி புஷ்கரணி; மேற்கே திருமுகமண்டலம்; வீற்றிருந்த திருக்கோலம்; அலாதநிகஞ்சம ப்ராஜாபதிக்கும் திருமங்கையாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷயம்; திருமங்கையாழ்வார், குலசேகராழ்வார் மங்களாசாஸனம்.

திருவிண்ணகர் (6).

உப்பிலியப்பன்; பூமிதேவீ நாச்சியார்; விஷ்ணு விமானம்; ஆர்த்திபுஷ்கரணி; கிழக்கே திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம்; மார்க்கண்டேயருக்கும், பெரிய திருவடிக்கும், காவேரிக்கும், தர்மதேவனுக்கும், ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

இந்த திவ்யதேசத்தெம்பெருமானை பொய்கையாழ்வாரும் பேயாழ்வாரும் மங்களாசாஸனம் பண்ணினதாகச் சிலர் அபிப்பிராயப்படுவதுண்டு. இவ்விருவரும் இதற்கருகேயுள்ள ஆராவமுதனை மங்களாசாஸனம் பண்ணியிருந்தபோதிலும், இவ்விண்ணகரைப் பற்றிக் கேட்டிருக்கமாட்டார்கள், ஏனென்னில், முதற்றிருவந்தாதி "வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும்" (77) என்ற பாசுரத்தில் விண்ணகரத்தெம்பெருமான் வீற்றிருந்த திருக்கோலத்துடன் எழுந்தருளியிருப்பதாகப் பொய்கையாழ்வார் சொல்லியிருக்கின்றார். திருக்குடந்தைக்குச் சமீபத்திலுள்ள திருவிண்ணகரப் பெருமாள் நின்ற திருக்கோலமாயிருப்பதால் இப்பாசுரம் உப்பிலியப்பன் விஷயமானதல்ல. மேலும் மூன்றாம் திருவந்தாதியில் "இளங்குமரன் றன் விண்ணகர்" (61) என்றும், "விண்ணகரம் வெஃகா விரிதிரை நீர்

வேங்கடம்" (62) என்றுமிருப்பதால் விண்ணகரம் என்பது காஞ்சிபுரத்திலுள்ள பரமேச்சுர விண்ணகரம் என்பது வ்யக்தம், இங்கு விண்ணகரம் (விஷ்ணுக்ரஹம்)என்பது ஸ்தலத்தின்பெயர்; 'பரமேச்சுரன்' என்பது இதைக்கட்டுவித்த "இளங்குமரன்"போன்ற பல்லவ ராஜாவின் பெயர். அன்றியும் இந்த விண்ணகரத்தில்தான் எம்பெருமான் வீற்றிருந்த கோலத்துடன எழுந்தருளியிருக்கின்றார். இதனால் பொய்கையாழ்வாரும் பேயாழ்வாரும் பரமேச்சுர வர்மாவின் காலத்திலிருந்தனராக வெளியாகின்றது.

மேலும் இவ்வாழ்வார்கள் அந்தாதி பாடினவர்களானதலான், சமீப காலங்களிற்றானிருந்தனராக உத்தேசிக்க வேண்டியிருக்கின்றது. என்னில், "விருந்தேதானும் &c" என்ற தொல்காப்பியம் பொருளதிகாரம் 552 வது சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் உரையெழுதுங்கால் அந்தாதிச் செய்யுள் தமிழ்ப்பாஷைக்கு நூதனமென்றும், அதற்கு உதாஹரணமாகப் பொய்கையாழ்வார் அந்தாதியை எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

சித்திரகூடம் (7).

கோவிந்தராஜப்பெருமாள்; புண்டரீகவல்லி நாச்சியார்; சாத்விகவிமானம்; கிழக்கே திருமுக மண்டலம்; யோகசயனம்; சிவன் முதலிய தில்லைமூவாயிரவருக்கும், கண்வமகர்ஷிக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார், குலசேகராழ்வார் மங்களசாஸனம்.

திருவெஃகாவைவிட்டுப் புறப்பட்டு கும்பகோணத்திற்குப் போகுமார்க்கத்தில் வரும்புலியூரான சிதம்பரத்தில் தங்கியிருந்த திருமழிசையாழ்வார் தில்லை கோவிந்தராஜனைப்பற்றி ஓரிடத்திலும் சொல்லாதபடியால், இவ்வாழ்வார் காலத்தில் இந்தத் திவ்ய தேசமுண்டாக வில்லையென்றும், பின்னர்ப் பரமேச்சுர விண்ணகரை எடுப்பித்த பரமேச்சுவரவர்மாவினாலாவது அல்லது நந்திவர்மப் பல்லவனாலாவது ராஜன்காலத்திலாவது (சகூ 600-650) கோவிந்தராஜன் சந்நிதி கட்டப்பட்டிருக்கவேண்டுமென்றும் வெளியாகிறது. இது சிவஸ்தலங்களில முக்கியமான நடராஜர் கோவிலுக்குள்ளிருப்பதால் ஸ்ரீ பாஷ்யகாரர் காலத்தில் இரண்டாவது குலோத்துங்க சோழனு (சகூ 1050)ம், பிற்காலங்களில் சைவ மதஸ்தர்களும் கோவிந்தராஜன் சந்நிதியை இடிக்கமுயன்றும் முடியாது போயிற்று.

சித்திரகூடம் பெரியாழ்வார் மங்களாசாஸனம் பெற்றதென்றும், சிலர் அபிப்பிராயப் படுவதுண்டு. இவ்வாழ்வார் சித்திரகூட பர்வதத்தைப் பாடினாரே தவிர, தில்லைத் திருச்சித்திர கூடத்தைப் பாடவில்லை. இவ்விரண்டுக்கும் வித்தியாசம்தெரியும்பொருட்டுத்திருமங்கையாழ்வாரும் குலசேகராழ்வாரும் 'தில்லைத் திருச்சித்ரகூடம்' என்று பாடியிருக்கின்றனர்.

திருவெள்ளறை (8).

புண்டரீகாக்ஷன்; பங்கயச்செல்வி நாச்சியார்; செண்பகவல்லி நாச்சியார்; விமலாக்ருதிவிமானம்; குசதீர்த்தம்; மணிகர்ணிகா தீர்த்தம்; சக்ரதீர்த்தம்; திவ்ய புஷ்கரணி; புஷ்கலதீர்த்தம்; பத்மதீர்த்தம; கந்தபுஷ்கரணி; க்ஷீரபுஷ்கரணி; வராஹதீர்த்தம்; சுவேதகிரி; கிழக்கே திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம்; பெரிய திருவடிக்கும், சிபிச்சக்ரவர்த்திக்கும், பூமிதவிக்கும், மார்க்கண்டேயருக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார், பெரியாழ்வார் மங்களாசாஸனம்.

முதற் றிருவாராதனம் தாயாருக்கும், பின் திருவாராதனம் பெருமாளுக்கும் நடக்கும் ஸ்தலம்.

தஞ்சைமா மணிக்கோயில் (9).

நீலமேகப் பெருமாள்; செங்கமலவல்லி நாய்ச்சியார்; சௌந்தர்யவிமானம்; கன்னிகா புஷ்கரணி; அமுததீர்த்தம்; கிழக்கே திருமுகமண்டலம்; வீற்றிருந்த திருக்கோலம்; பராசர முனிக்கு ப்ரத்யக்ஷம்; பூதத்தாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

தஞ்சையாளிநகர் (10).

நரசிங்கப் பெருமாள்; தஞ்சைநாயகி; வேத சுந்தர விமானம்; சூரிய புஷ்கரணி; ராமதீர்த்தம்; கிழக்கே திருமுக மண்டலம்; வீற்றிருந்த திருக்கோலம்; மார்க்கண்டேய மகாமுனிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

இவ்வூர் உறையூர் கும்பகோணத்திற்குப் பின்னும், கங்கை கொண்ட சோழபுரத்திற்கு முன்னும சகஸ்ரு 800 முதல் 940 – வரையில் சோழநாட்டுக்குத் தலைமைநகரா யிருந்தது.

தஞ்சை மாமணிக் கோயிலையும் தஞ்சையாளி நகரையும் ஒரே திவ்யதேசமாகப் பிள்ளைப்பெருமாளையங்கார் முதலான சிலர் எடுத்துக் கொள்ளுகிறார்கள். காஞ்சிபுரத்துள்ள திருவேஃகா, அட்டபுயகரம், பாடகம் முதலான ப்ரத்யேகமான திவ்ய தேசங்களைப் போல் தஞ்சைநகரிலுள்ள மாமணிக்கோயில், தஞ்சையாளி நகர் என்ற இரண்டு திவ்யதேசங்களுக்கும் பெருமாள், தாயார், விமானம், புஷ்கரணி இன்னுருக்கு ப்ரத்தியக்ஷம், மங்களாசாஸனமான ஆழ்வார்கள் எல்லாம் தனித்தனி யிருப்பதால், இவ்விடத்தில் இரண்டு திவ்யதேசங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

உறையூர் (11).

அழகிய மணவாளப் பெருமாள்; கல்யாண விமானம். உறையூர் வல்லிநாச்சியார்; கல்யாண தீர்த்தம்; குடமுருட்டி நதி; வடக்கே திருமுக மண்டலம்; நின்ற திருக்கோலம்; முப்பது முக்கோடி தேவதைகளுக்கும், ரவிதர்ம மகாராஜாவுக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

இவவூர் ஆழ்வார்கள் அவதார காலத்திற்குமுன் பேசுமார் சகஸ்ரு 500 வரையில சோழதேசத்தின் ப்ரதான நகரா யிருந்தது இது திருப்பாணாழ்வார் அவதார ஸ்தலம்.

கரம்பனூர் (உத்தமர்கோயில்) 12.

புருஷோத்தமன்; பூர்வாதேவி; உத்யோக விமானம்; கதம்ப தீர்த்தம்; வாழைமரம்; கிழக்கே திருமுகமண்டபம்; புஜங்கசயனம்; கதம்ப மகர்ஷிக்கும் திருமங்கையாழ்வாருக்கும் உபரிசாவசுவுக்கும், ஸநக ஸநந்தன ஸநத் குமாரர்களுக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

புள்ளம் பூதங்குடி (13).

வல்விலிராமன்; பொற்றாமரையாள்; சோஸனவிமானம்; க்ருத்ர தீர்த்தம்; கிழக்கே திருமண்டலமும்; புஜங்கசயனம்; சகரவர்த்தி திருமகனுக்கும, க்ருத்ரராஜனுக்கும் ப்ரத்யக்ஷமாய் மோக்ஷம் கொடுத்தவிடம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

ஆதனூர் (14).

ஆண்டளக்குமையன்; ஸ்ரீரங்கநாச்சியார்; ப்ரணவ விமானம்; ஸூரிய புஷ்கரிணி; கிழக்கே திருமுகமண்டலம்; புஜங்க சயனம்; காமதேனுவுக்கும் திருமங்கை யாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவழுந்தூர் (15).

ஆமருவியப்பன்; செங்கமலவல்லித் தாயார்; கருடவிமானம்; தர்சனபுஷ்கரிணி; கிழக்கே திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம்; உபரிசரவசு ராஜாவுக்கும், காவேரிக்கும், தர்ம தேவதைக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

சிறுபுலியூர் (16).

அருமாகடல்; திருமாமகள் நாய்ச்சியார்; நந்தவர்த்தன விமானம்; அநந்த ஸரஸ்ஸு; மாரசபுஷ்கரிணி; தெற்கே திருமுகமண்டலம்; புஜங்க சயனம்; வ்யாஸயாமுனிக்கும் வியாக்ரமருக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருச்சேறை (17).

ஸாரக்ஷேத்ரம்; ஸாரநாதன், ஸாரநாயகி, ஸாரவிமானம், ஸாரபுஷ்கரிணி; கிழக்கே திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம், காவேரிக்கு ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

தலைச்சங்க நாண்மதியம் (18).

நாண்மதியப்பெருமாள்; வெண்சுடர்ப் பெருமாள்; தலைச்சங்க நாய்ச்சியார்; செங்கமலவல்லி; சந்தாவிமானம்; சந்திர புஷ்கரிணி; கிழக்கே திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம்; தேவப்ருந்தங்களுக்கும் சந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

கண்டியூர் (19).

அரசன் சகாயந்தீர்த்த பெருமாள்; கமலவல்லி நாய்ச்சியார்; கமலாக்ருதிவிமானம்; கபாலதீர்த்தம்; ருத்ரனுக்குக் கபால நிவர்த்

திசெய்தவர்; அகஸ்த்யருக்கு ப்ரத்யக்ஷம்: திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருநாகை (20).

ஸௌந்தர்ய ராஜப்பெருமாள்; ஸௌந்தர்யவல்லித் தாயார்; ஸௌந்தர்ய விமானம்; ஸாரபுஷ்கரிணி; கிழக்கே திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம்; நாகராஜனுக்கும் திருமங்கையாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

இது பூர்வத்தில் பௌத்த மதஸ்தர்கள் விசேஷமாயிருந்த ஸ்தலம்; திருமங்கையாழ்வார் பௌத்த கோபுரத்துள்ள பொற்சிகரத்தையும பௌத்த விக்ரஹத்தையும் கொண்டுவந்து ஸ்ரீரங்கத்தில் முதல் மூன்று பிராகாரங்கள் முதலான திருப்பணிகள் செய்தனர்.

திருநறையூர் (21).

வடிவழகிய நம்பி; நம்பிக்கைநாய்ச்சியார்; ஸ்ரீநிவாச விமானம்; மணிமுக்தாநதி; கிழக்கே திருமுகமண்டலம; நின்ற திருக்கோலம்; மேதவமுனி கன்னிகையை பலிபிடித்துக்கொண்டுபோக, அவனைச் சபித்து மேதவ முனிக்கு அருள்செய்த ஸ்தலம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

இந்த திவ்யதேசம் திருமங்கையாழ்வாரால் மாத்திரம் மங்களாசாஸனம் பண்ணப்பட்டதாயினும், நாயன்மார் அறுபத்துமூவரில் ஒருவராயும். சோளதேசத்தரசனுயும் "மைவைத்தகண்டனெறியன்றி மற்றோர் நெறி கருதாது" 'எண்டோளீசற்கு எழில் மாடமெழுபது செய்துலகமாண்ட கோச்செங்கண் சோழனால் எடுப்பிக்கப்பட்டபடியால், இதற்கு அதிக வைபவ முண்டாயிற்று. நாக்கொண்டு மானிடம் பாடாத திருமழிசைப் பிரானைப்போலல்லாது திருமங்கையாழ்வார் இவ்வரசனைத் திருநறையூர்ப் பதிகம் பத்தில் ஒன்றில் புகழ்ந்து பாடியிருக்கின்றார்.

நந்திபுரவிண்ணகரம் (22).

விண்ணகரப்பெருமாள்; ஜகந்நாதர்; நாதநாதப்பெருமாள்; செண்பகவல்லி நாய்ச்சியார்; மந்தார விமானம்; நந்திதீர்த்தம்; மேற்கு திருமுகமண்டலம்; வீற்றிருந்த திருக்கோலம்; நந்திவர்மாவுக்கும் சிபிச்சக்ரவர்த்திக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

இந்தளூர் (23)

சுகந்தவனநாதன்; மருவினிய மைந்தன்; சந்த்ரசாபவிமோசன நாய்ச்சியார்; புண்டரீகவல்லி நாய்ச்சியார்; வேதசக்ரவிமானம்; இந்து புஷ்கரிணி; கிழக்கே திருமுகமண்டலம்; வீரசயனம்; சந்திரனுக்கு ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

காழிச்சீராமவிண்ணகரம் (24).

தாடாளன்; திருவிக்ரமமூர்த்தி; மட்டவிழும் குழலி நாய்ச்சியார்; புஷ்கலாவர்த்தகவிமானம்; சக்ரதீர்த்தம்; சங்கபுஷ்கரிணி; கிழக்கே திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம்; அஷ்டகோண மகர்ஷிக்குப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களா சாஸனம்.

மகாபலி சக்ரவர்த்தியிடம் சென்று மூன்றடிவேண்டத் தாடாளஸ்வரூபமாகி ஆகாசமும் பூமியும் ஈரடியாலளந்து மற்றோரடிக்கு அச்சக்ரவர்த்தியின் சிரசையும் ஒப்புக்கொண்டஸ்தலம் சைவகுரவர் மூவரிலொருவரான திருஞானசம்பந்தருடன் திருமங்கையாழ்வார் சம்வாதம்செய்து அவர்கையில் பிடித்திருந்த ஆலத்தைவாங்கி வெறிந்தவிடம்.

கூடலூர் (25).

வையங்காத்த பெருமாள்; பத்மாசனவல்லி நாய்ச்சியார்; சுத்தசத்வவிமானம்; சக்ரதீர்த்தம்; கிழக்கே திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம்; நந்தகமாமுனிக்கு ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்கண்ணங்குடி (26).

சாமளமேனிப்பெருமாள்; அரவிந்தவல்லி நாய்ச்சியார்; உத்பல விமானம்; ராவணபுஷ்கரிணி; கிழக்கே திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம்; ப்ருகுசைத்யருக்கும், கௌதமமுனிக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்கண்ணமங்கை (27).

பக்தவத்ஸலப்பெருமாள்; அபிஷேகவல்லித்தாயார்; உத்பலவிமானம்; தர்சனபுஷ்கரிணி; கிழக்கே திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம்; வருணனுக்கும், உரோமசனுக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவெள்ளியங்குடி (28).

கோலவில்லிராமன்; மரகதவல்லி நாய்ச்சியார்; புஷபலாவரத்த கவிமானம்; சுக்கிரபுஷ்கரிணி, ப்ரஹ்ம தீர்த்தம்; கிழக்கே திருமுக மண்டலம்; புஜங்கசயனம்; சுக்கிரனுக்கும் பிரமனுக்கும் பராசருக் கும் இந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸ னம்.

மணிமாடக்கோயில் (29).

நந்தாவிளக்குப்பெருமாள்; நரநாராயணர்; புண்டரீகவல்லி நாய் ச்சியார்; ப்ரணவவிமானம்; இந்திரபுஷ்கரிணி; ருத்ரபுஷ்கரிணி; கிழ க்கே திருமுகமண்டலம்; வீற்றிருந்த திருக்கோலம்; ஏகாதசருத்ர ருக்கும், இந்திரனுக்கும், ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களா சாஸனம்.

இதுமுதல் பார்த்தன் பள்ளிவரையிலுள்ள ஸ்தலங்கள் பதி னொன்றும் நாங்கூர்நாட்டில் திருவாலி திருநகரியைச்சுற்றி நான்கு மைல் தூரத்திற்குள்ளிருக்கின்றன. இந்நாடு திருமங்கையாழ்வார் நாடாகையால் அங்குள்ள இன்னம் சிறியஸ்தலங்களையெல்லாம் மங் களாசாஸனம் பண்ணியிருக்கின்றார்.

வைகுந்த விண்ணகரம் (30).

வைகுந்தநாதன்; தாமரைக்கண்ணுடையபிரான்; வைகுந்தவ ல்லி நாச்சியார்; அநந்தசத்யவர்த்தகவிமானம்; லக்ஷ்மிபுஷ்கரிணி; தங்கபுஷ்கரிணி; விரஜை; கிழக்கே திருமுகமண்டலம்; வீற்றிருந்த திருக்கோலம்; உபரிசரவசு ராஜாவுக்கும், உதங்கரிஷிக்கும் ப்ரத்ய க்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

அரிமேயவிண்ணகரம் (31).

குடமாடு கூத்தப்பெருமாள்; அம்ருதகடவல்லி நாய்ச்சியார்; உச்சஸ்ருங்கவிமானம்; கோடிதீர்த்தம், அமுததீர்த்தம்; கிழக்கே திருமுகமண்டலம்; வீற்றிருந்த திருக்கோலம்; உதங்கமகாரிஷிக்கு ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

இருத்தேவனர் தொகை (32).

தெய்வநாயகப்பெருமாள்; கடல்மகள் நாய்ச்சியார்; சோபனவி மானம்; சோபனபுஷ்கரிணி; தேவசபாபுஷ்கரிணி; மேற்கே திருமுக மண்டலம்; நின்ற திருக்கோலம்; வஸிஷ்டருக்கு ப்ரத்யக்ஷம்; திரு மங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

வண்புருடோத்தமம் (33).

புருஷோத்தமப்பெருமாள்; புருஷோத்தமநாயகி; சஞ்சீவி விக்ரஹவிமானம்; திருப்பாற்கடல தீர்த்தம்; கிழக்கே திருமுகமண்டலம்; நின்றதிருக்கோலம்; உபமந்யுவுக்கு ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம.

செம்பொன் செங்கோயில் (34).

பேரருளாளப்பெருமாள்; அல்லிமாமலர் நாய்ச்சியார்; கனகவிமானம்; கனகதீர்த்தம்; நித்திய புஷ்கரிணி; கிழக்கே திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம்; ருத்ரனுக்கு ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்,

இருத்தெற்றியம்பலம் (35).

செங்கண்மாநூ; செங்கமலவல்லி நாய்ச்சியார்; தேவவிமானம்; சூர்யபுஷ்கரிணி; கிழக்கே திருமுகமண்டலம்; புஜங்கசயனம்; செங்கமலவல்லி நாய்ச்சியாருக்கும், அநந்தனுக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருமணிக்கூடம் (36).

மணிக்கூட நாயகன்; திருமாமகள் நாய்ச்சியார்; கனகவிமானம்; சந்திர புஷ்கரிணி: கிழக்கே திருமுக மண்டலம்: நின்றதிருக்கோலம்; பெரிய திருவடிக்கும், சந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்காவளம்பாடி. (37)

கோபாலகிருஷ்ணன்; மடவரல் மங்கைநாச்சியார்; செங்கமல நாச்சியார்; ஸ்வயம்புவிமானம்; தடமலர்ப் பொய்கை; கிழக்கே திருமுக மண்டலம்; நின்றதிருக்கோலம்; சேனைத் தலைவருக்கும், மித்திரதேவருக்கும், ருத்ரனுக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவெள்ளகுளம். (38)

கண்ணன் நாராயணன்; பூவார் திருமகள் நாய்ச்சியார்; தத்வதோதகவிமானம்; வெள்ளகுள தீர்த்தம்; கிழக்கே திருமுகமண்டலம்; நின்றதிருக்கோலம்; இக்ஷ்வாகு வம்சத்தில் ஸ்வேதராஜனுக்கும் ருத்ரனுக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

பார்த்தன்பள்ளி. (39)

தாமரையாள் கேள்வன்; தாமரைநாயகி; நாராயண விமானம்; சங்கசரஸ்ஸு; மேற்கே திருமுகமண்டலம்; நின்றதிருக்கோலம்; பார்த்தனுக்கும் வருணனுக்கும் ஏகாதச ருத்ரருக்கும் ப்ரத்யக்ஷம்; திருமங்கையார்வார் மங்களாசாஸனம்.

அன்பில். (40)

திருவடி வழகியநம்பி; அழகியவல்லி நாச்சியார்; தாரகவிமானம்; மண்டூக புஷ்கரிணி; கிழக்கே திருமுகமண்டலம்; நின்றதிருக் கோலம்; புஜங்கசயனம்; ப்ரம்மாவுக்கும் வால்மீகருக்கும் ப்ரத்யக்ஷம்; திருமழிசையாழ்வார் மங்களாசாஸனம்.

சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பதில் திருமங்கையாழ்வார் மங்களாசனம்பண்ணாது விட்டது இஃதொன்றுதான். அக்காலத்து. ப்ரசித்தமானஸ்தலங்களை மாத்திரம் மங்களாசாஸனம் பண்ணின திருமழிசையாழ்வார் இதைப்பாடினு ரென்பது ஆச்சரியம்!

சோழநாடு முற்றும்.

ம ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

மகாதேவ கோவிந்த ரானடே*.

புதியநூற்றாண்டு பிறந்து நமது தேயத்தோரெல்லோருக்கும் இன்பத்தை விளைக்குமென்றிருந்தபோழ்து நமது நாட்டோருக்கு ஆற்றாத துன்பத்தை விளைத்த ஒரு கடுஞ்சாவு நிகழ்ந்தது. நமது நாட்டோரெல்லோருக்குங் குருவைப்போலிருந்தவரும், அபரிமிதமான புத்தி கூர்மையுள்ளவரும் முழுதும் அகங்காரமற்றவருமான மகான் மகாதேவ கோவிந்தரானடே நமது உலகத்தை விட்டு விண்ணுலகஞ் சென்றார்.

இவர் 1843-ம் வருஷத்திற் பிராமண சாதியில் உயர் குலத்திற் கோலாப்பூரிற் பிறந்தவர். இவருக்குச் சகோதரர்கள் இருவர். ஒருவர் இந்தூர் நாட்டில் உயர்ந்த பதவியில் அமர்ந்திருக்கின்றார். மற்றொருவர் தென்னாப்பிரிக்கா ராணுவத்தில் உத்தியோகம் வகிக்கின்றார். ஆரம்பத்திலே பம்பாய் எல்பின்ஸ்டன் கலாசாலையிற் படிக்கத்தொடங்கினார். இவருடைய புத்தி சாதுரியத்தையும், மேலான அறிவையும் இவருக்கு உபாத்தியாயர்களாயிருந்த ஐரோப்பியர்களே கண்டு மிகவும் வியந்தார்கள். வெகுசீக்கிரத்திற் பி. ஏ. எம். ஏ. பரீக்ஷைகளிற் றேறினார். இவருக்கு எம். ஏ. தேறியதும் எம். ஏ. வகுப்புப் பிள்ளைகளுக்கே, வெகு நேர்த்தியாய்ப் பாடஞ் சொன்னாரென்றால், நம் நேயர்களே அவரது அறிவு மிகவும் ஆழ்ந்ததென்று அறிந்துகொள்ளலாம். பிறகு இவர் சட்டப் பரீக்ஷையிலுந் தேறி, பம்பாய், உயர் நீதிசாலையில் நியாயவாதியாயினர். ஆனால் அவர் வெகுநாள் வக்கீலாயிருக்கவில்லை. 1866-ஆம் வருஷம் முதல் உதவி நியாயாதிபதியாகவும், ஜில்லா நியாயாதிபதியாகவும், சிறுவழக்கு நியாயாதிபதியாகவும், இன்னும் பல உயர்ந்த பதவிகளிலும் அமர்ந்தார். கடைசியாக 1893-ஆம் வருஷத்தில் இவர் தம்மாணாக்கருளொருவராகிய கனம் பொருந்திய டிலாங் அவர்கள் இறந்துபோனவுடன், பம்பாயிலுள்ள உயர் நீதிசாலை நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டனர்.

---

* இவ்வியாசம் 1901. ௵ மார்ச்சு மாதத்தில் ஞானபோதினி பத்திரிகையில் அச்சிடப்பட்டிருக்கிறது.

இம்மகானுடைய பெருமையை யெல்லாம் சுருக்கமாய் எழுதுவதென்பது அசாத்தியமான காரியம். நமது தேசத்தை எவ்விதத்திலாவது முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டு உழைந்தவர்களுள் இவர் பிரதானமானவர். எச்சபையா யிருந்தாலுஞ்சரி, எவ்விடத்திலாவது நடத்தப்பட்டு வந்தாலுஞ் சரி, அது தேசத்துக்கு நன்மை பயக்கத்தக்கதாய் மட்டு மிருக்க வேண்டும். அவர் அதற்காக உழைப்பாரென்பது திண்ணம். அவர் ராஜ்ஜிய உத்யோகஸ்தரா யிருந்ததுடன், நமது காங்கிரஸ் மகாசபையை நடாத்துபவருள் தலைநின்றவருமா யிருந்தார். காங்கிரஸ் மகாசபையை ஆதியில் ஏற்படுத்தினதும் இப்பேரறிவாளரே. தாம் சாமளவும் அதற்காகப் பெரிதும் பாடுபட்டு உழைத்தார். அதனால் அவருக்கு எவ்வளவோ நஷ்டங்கள் வந்தன. அவைகளையெல்லாம் அவர் நஷ்டமாகவே பாவிக்கவில்லை.

" நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது"

என்ற வள்ளுவனார் வாக்கு இவர் விடயத்தி லுண்மையாகவே முடிந்தது. தமது முதிர்ந்த அறிவுகொண்டு அம்மகா சபையை முன்னுக்குக் கொண்டுவரும் வழிகளை நாடிச்சிறிதேனுஞ் சலியாமல் நடாத்தி வந்தனர்.

மேலும், இவர் இந்தியர்களுக்கு எவ்வளவு உயர்ந்த பதவி கிடைக்கக்கூடுமோ அவ்வளவு உயர்ந்த பதவியி லமர்ந்திருந்தும், சிறிதேனும் அகங்கார முள்ளவரல்லரா யிருந்தார். ஒருவன் எவ்வளவு தாழ்ந்தப்பதவியி லிருப்பவனு யிருந்தாலும், அவரைப்போய் எளிதிற் பார்க்கலாம். எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசிக்கொண்டிருக்கலாம். அவர் காட்சிக்கு எளியார், இன்சொலுடையார்; அவருக்குக் கோபமென்பது இன்னதென்று தெரியாது. யாரேனும் இரண்டு எளியோர்கள் தங்கள் வழக்கைத் தீர்த்துக்கொள்ள அவரிடம் வந்து சேர்ந்தால், அதை முழுவதும் விசாரித்து, அவர்களைச் சாந்தப்படுத்தி வழக்கைத் தீர்த்தனுப்புவார். அந்தோ! இவ்வளவு உயரிய குணமுள்ளோர் வேறு யாரேனு முளரோ? இத்தகைய பேரறிவாளரை, அன்புடையண்ணலை, அருளறம் பூண்டோனை யிழக்கும்படியான தௌர்ப்பாக்கியத்தை யென்னென்

துரைப்பது? நமது தேசத்து வழக்கங்களை யெல்லாஞ் சீர்திருத்த வேண்டுமென்ற பேரவாவுடன், தம் வாழ்நாள் முழுவதும் உழைத்தார். இறந்து போவதற்கு 18 - நாட்களுக்குமுன் 'நான் ஹிந்து மதத்தேனுமல்லேன், மகம்மதிய மதத்தேனுமல்லேன், எல்லாருக்கும் பொதுவான கடவுளை வழிபடு மதத்தார்களி லொருவனாவேன்' என்று சொன்னார். 'ஏழைகளுக்கெல்லாம் நேயன்' என்பதே இவருடைய பெயர். நாம் அநுசரித்துவரும் அநேக வழக்கங்களை மாற்றினால் நமது தேசத்திற்கு நன்மையுண்டாகுமென்றும், நாம் இன்ன இன்ன மார்க்கத்தி லுழைத்தால் நலமுண்டென்றும் தெளிவாய்ப் பல முறை பேசியிருக்கிறார். இந்து வழக்கச் சீர்திருத்தச் சங்கமென்றே ஒரு சங்கமேற்படுத்தி யிருக்கின்றார். இவர் மிகுந்த பரோபகாரி தமது புத்தியினாலேயன்றித் திரவியத்தாற் பலருக்கும் உதவி புரிந்திருக்கிறார். இவர் இறந்தது நமது நாட்டாருக்கே அளவிடக்கூடாத பெருநஷ்டமென்பது ஒருதலை.

இவர் பம்பாய் மாநகரத்தில் நியாயாதிபதியா யிருக்கும்பொழுது உயர்ந்த அறிவுடன், நியாயத்தையே கடைப்பிடித்து நடந்துவந்தார். அவரோடுகூட இருந்த மற்றைய நியாயாதிபதிகளெல்லாருக்கும் இவரிடத்தில் மிகுந்த மரியாதையுண்டு. இவர் தீர்ப்புக்களெல்லாஞ் சிறிதேனும் நியாயத்தினின்றும் வழுவின வல்ல, ஆகையாற்றான் அவர் பிணத்தை மயானத்துக்குக் கொண்டு போனபொழுது வெள்ளைக்காரர்களி லுயர்ந்த பதவியை வகிப்போர்களும் அவரது சாவினால் நிகழ்ந்த துக்கம் ஆற்றாமற், கூடவே வந்தார்கள். இவருடைய வாழ்க்கை படாடோப மற்றதும் தீவினையற்றதுமாவதோடு மேன்மையும் வாய்ந்தது. இம்மானது ஞாபகம் நமது மனத்தை விட்டு என்றென்றும் நீங்காதென்று பம்பாய்ப் பிரதான நியாயாதிபதி யவர்களாகிய ஜெக்கின்ஸ் என்பவர் சொல்லுகிறார். இவருடைய மேன்மையை யறிந்த இராஜாங்கத்தார், இவருக்கு ஸி-ஐ-இ பட்டமும், ராவ்பகதூர் பட்டமும் இவருக்குத் தக்க காலத்தில் அளித்தார்கள்.

இவர் அநேகம் புத்தகங்களும் எழுதியிருக்கிறார். அவைகளில் முக்கியமானவை 'மகராஷ்ட்ரர்களின் சரித்திரம்' எனப்பெயர் பூண்ட புத்தகங்கள். இன்னும் இரண்டு மூன்று புத்தகங்களிற் சரித்திரத்தை முடிப்பதாக நினைத்திருந்தார். ஐயோ! கொடிய கூற்றுவன் இவ

ரைச் சரேலென நம்மைவிட்டுப் பிரிந்துக்கொண்டு போய்விட்டனனே!

இப்படியாய்ச் சகலருக்கும் நன்மை புரிவோரும், மிகுந்தபணிவையுடையவரும், எப்பொழுதும் தமது தேசநன்மையைக் கண்முன் வைத்துக்கொண்டு தமக்குக் கேடுவந்தாலுங் கவனியாதவருமாயிருந்த மகான் இறந்தால் யாவரே துக்கப்படாதார்? இவர் வாழ்நாளை அநேகர்போல வீணாகக்கழிக்கவில்லை. செல்வமிருந்தென்ன? பதவியிருந்தென்ன? மற்றையோர்களுக்கு இவையிருப்பதிலென்ன பிரயோஜனம்? இவர்போலும் நல்லறிவாளரிடத்தன்றோ லக்ஷ்மி குடியிருக்கவேண்டும். தெய்வபக்தியில் மிகவு மாழ்ந்து பரமனே கதியென்று நம்பி, பிறருக்காகவே தமது புத்தி செல்வம் எல்லாவற்றையுங் கொடுத்துவந்த மகானது ஞாபகம நம்மது மனத்தைவிட்டு எந்நாளும நீங்காது. ஒருவருக்கும் மற்றொருவருக்கும் ஒரு ஜாதியாருக்கும் மற்றொரு ஜாதியாருக்கும், ஊன்றிப் பார்த்தால் வித்தியாசமில்லையென்றும் யாரிடத்திலும, தெய்வத்தன்மை உளதென்றும், யாவரையும், ஒன்றுக்கும் பிரயோஜன மற்றவரென்று சொல்வதிற் பயனில்லையென்றும் போதித்த பரமபுருஷர் இவர். நன்மையே விரதமாக நயந்து நின்றவராகிய ரானடே. பிறர் தம்மைப் புகழ வேண்டுமென்று ஒரு காரியமுஞ் செய்வதில்லையென்பதைத் தமது சீலத்தாலும், தூயவொழுக்கத்தாலுங் காண்பித்தார். ஒரு சமயம், சாவு என்பதை ரானடே விவரித்து இவ்வாறு கூறுகின்றனர்: நாம் இறந்துபோகுஞ் சாவொன்றுளதென்றும், சாவு சாகுஞ் சாவொன்றுளதென்றுஞ் சொன்னார். "மெய்ம்மறந்து, ஆன்மா பூரித்து, தனது துன்பம் தேகவருத்தம் முதலிய எல்லாவற்றையு மறந்து, தனது கடமையினின்றும வழுவாமல் உலகத்துக்கு நன்மையையே நாடி உழைத்து வரும் மகானது சாவு இறந்தது. தனது ஆன்மாவை மறந்து, காயசுகத்திலேயே உழலுகின்றவன் இறக்கிறான். ஆகையால், உலகத்தோர் சாவெனக் கொள்வது சாவன்று" என்று இம்மகானே சொல்லியிருக்கின்றனர். "அவருக்குப் பின்தங்கியிருக்கும் நாம் அவர் செய்த நன்மையை மறவோம். அவர் வாழ்நாளை அவர் வீணாகக் கழிக்கவில்லை. அவருடைய தெய்வபக்தி, உயர்ந்த கோட்பாடு, உலகத்தோருக்கு நன்மையையே

புரியவேண்டுமென்ற ஆசை இவையெல்லாம், நம்மை நன்மார்க்கத்திற்குக் கொண்டு வரவேண்டும். அவர் வாழ்நாளை நமது கண்முன் வைத்துக்கொண்டு அவர் உழைத்த வழியிலேயே நாம் உழைக்க வேண்டும். ஒரே கடவுள் உண்டென்றும், எல்லோருஞ் சகோதரர்களென்றும், அவர் செப்பியபடி நாம் நடந்தொழுக வேண்டும். அவரோ இறக்கவில்லை. ஆகாயத்திற் பளபளவென்று மின்னும் நக்ஷத்திரங்களி லொன்று யிருந்துகொண்டு, நமது காரியங்களை யெல்லாம் உற்றுநோக்கி, நமது ஒழுக்கங்களைச் சீர்திருத்துகிறார்'' என்று பம்பாய் உயர்நீதி சாலை நியாயாதிபதிகளி லொருவராகிய சந்திரவர்க்கர் புனைந் துரைக்கின்றார். உலகமுள்ளவரைக்கும் அவர் பெயர் நமது தேசத்தோர் மனத்திருந்து அவர்களை நல்வழியிலுய்க்கு மென்பதற்கு ஐயமுமுண்டோ?

கு. ரா. ஸ்ரீநிவாஸஐயங்கார்.

வியாபாரம்

II.

சென்ற மாதத்தில், வியாபாரத்துக்கு வேண்டிய சாதனங்களைப் பற்றிச் சொன்னோம். வியாபாரத்தில் மிகவும் உயர்ந்தது புதிதாய் உண்டுபண்ணி விற்பது தான். ஒருவரிடமிருந்து ஒரு சரக்கை வாங்கி மற்றொருவரிடம் விற்பது வியாபாரத்தில் மிகத் தாழ்ந்தது. புதிதாக உண்டுபண்ணுவதில் தான் அதிகலாபமும் நாட்டுக்கு நன்மையும் உண்டாகும். நமது நாட்டில் இவ்வித வுயர்ந்த வியாபாரமே யில்லாமற் போய்விட்டது. வேண்டிய முயற்சியும், ஒற்றுமையும், பொருளும், அரசாங்கவுதவியு மில்லாமல் போனதே தான் காரணம்.

ஒருநாட்டிற்கு மற்றொரு நாட்டிலிருந்து வரும் சாமானுக்கு இறக்குமதி என்று பெயர். ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு போகும் சாமானுக்கு ஏற்றுமதி யென்று பெயர். கண்ணாடி நம்மூருக்கு இறக்குமதி, ஜெர்மனி தேசத்திற்கு ஏற்றுமதி. இம்மாதிரி ஒவ்வொரு சாமானும் அவ்வவ்வூரிலேயே விலைபோனாலொழிய, ஒரு ஊருக்கு ஏற்றுமதியாகவாவது இறக்குமதியாகவாவது இருக்கவேண்டும்.

இப்பொழுது பின்னே கொடுத்திருக்கும் சில கணக்குகளைப் பாருங்கள்.

ணக்கு 1.

1899-1900. வருஷத்து

நமது நாட்டு ஏற்றுமதி இறக்குமதிகளின் விவரம்.

1899-1890-வருஷத்தின்

இறக்குமதியின் பொருமானம்.

உப்பு	1464-	பதினாயிரம்	ரூபாய்கள்.
புத்தகம் முதலியன	933	,,	,,
நிலக்கரி	810	,,	,,
நூல் முதலியன	2,460	,,	,,
துணி	27,002	,,	,,
கெட்டிசாமான் முதலியன	1,590	,,	,,
சாராயங்கள்	1,597	,,	,,
இயந்திரங்கள்	2,542	,,	,,
இரும்பு	2,420	,,	,,
எஃகு	1,000	,,	,,
பித்தளை	629	,,	,,
மண் எண்ணை	3,180	,,	,,
சாப்பாட்டு சாமான்கள்	1,689	,,	,,
ரயில் சாமான்கள்	2,776	,,	,,
பட்டுசரக்கு	1,129	,,	,,
பட்டுநூல்	576	,,	,,
சர்க்கரை	3,376	,,	,,
கம்பளி சாமான்கள்	1,758	,,	,,

கணக்கு 2.

1899-1900-ம். வருஷத்து

ஏற்றுமதிகளின் பொருமானம்.

காப்பிக்கொட்டை	1,506-	பதினாயிரம்	ரூபாய்கள்.
பருத்திப் பஞ்சு	9,925	,,	"
நூல்	7,008	,,	,,
துணி	2,611	,,	,,
அவுரி	2,692	,	,,
அரிசி	13,101	,,	,,
கோதுமை	3,909	,,	,,
தோல்	10,464	,,	,,
ஜூட்	8,071	,,	,,
ஜூட் சாமான்கள்	6,265	,,	,,
சரிகை	1,137	,,	,,
கஞ்சா	8,203	,,	,,
ஆமணக்கு கொட்டை	10,110	,,	,,
தேயிலை	9,177	,,	,,
மரம்	1,096	,,	,,
கம்பளி நூல்	1,801	,,	,,

கணக்கு 3.

வேலை.	இயந்திர சாலைகள் கணக்கு.		
	இந்தியா.	பிரான்சு.	ஜெர்மெனி.
பருத்தி சம்பந்தமானது	219	6661	205,292
உலோகங்கள் வெப்பது	15	5114	158,618
கட்டிடம் கட்டுதல்		7440	198,985
சுரங்கவேலை	100	3167	4003
கடுதாசு செய்தல் அச்சிடுதல்	90	3464	17,631
நெல் குத்துதல் மாஞ்சரித்தல் முதலியன	596	15,976	269,971
மருந்து செய்தல்		2,120	10,385

கணக்கு 4.

1870-ம் வருஷம் முதல், ஏற்றுமதி இறக்குமதிக் கணக்கு.

ஐந்து வருஷக் கணக்கு.	சாமான்.			நாணயம். இறக்குமதி.	மொத்தம் அதிகம்.
	இறக்குமதி.	ஏற்றுமதி.	அதிகம் * ரூ.		
1869-70 to 1873-74	330,365,880	562,527,230	232,162,400	66,742,400	165,418,950
1889-90 to 1893-94	707,883,900	104,992,0360	342,136,460	142,424,840	199,711,640
1894-95 to 1898-99	736,663,360	107,533,0240	338,666,880	849,540,80	253,713,800

* எப்பொழுதும் நமது நாட்டில் ஏற்றுமதியே அதிகம். அதற்குக்காரணம் பின்பு கூறப்படும்; நாளாகநாளாக அதிகமா கிக்கொண்டே வருகிறார்கள், நாட்டில் ஏழைமைத்தனம் அதிகரிக்கின்றது.

கணக்கு 5

நமது நாட்டில் உண்டாகும் சாமான்கள்.

தங்கம்	1900-ம் ஸ்ரு		510, 000	அவுன்ஸ்.
மண் எண்ணெ	,,	,,	80, 000, 000	காலன்.
நலக்கரி	,,	,,	4, 933, 000	டன்.

வேறு சில கணக்குகள் பின்பு கொடுக்கப்படும்.

ம. கிருஷ்ணசாமி ஐயர்.

ஜப்பானிய அரசாட்சியின் மேன்மை.

I

தற்காலத்தில், செல்வமும் பலமும் மிகுதியாயடைந்து உலகத்தின் ஒவ்வொரு பாகத்தையும் வென்று அவற்றையெல்லாம் ஆண்டு வரும் ஐரோப்பியர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். அவர்கள் ஆசியா, ஆபிரிகா, அமெரிகா, ஓஷியானியாவாகிய மற்ற இந்து கண்டங்களிலும் சென்று அங்கிருப்பவர்களோடு யுத்தம் புரிந்து, நாட்டைப்பிடித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். பின்பு அங்கங்கு தங்களைச் சேர்ந்தவர்களை அதிகாரிகளாக நியமித்தோ, அல்லது தாங்களே அங்கு குடியேறி அரசாட்சி செய்துகொண்டோ வந்திருக்கிறார்கள். அல்லாவிடில், அவ்வவ் நாட்டிலுள்ள வரசர்கள் இவர்களுக்கு நிரம்ப உபகாரஞ் செய்திருப்பார்களே யாகில், எல்லா விஷயங்களிலும் தங்களுக்குக் கீழ்ப்படிந்தவனாக அவனிருப்பானேயாகில், அவனை பொம்மையரசனாக மதித்து வருவார்கள். அமெரிக்காக் கண்ட முழுவதும் ஐரோப்பியர் கையில் அகப்பட்டு விட்டது. ஆபிரிகாவும் அப்படித்தான். ஓஷியானியா முழுவதையும் இங்கிலீஷ் காரர்களே யாண்டு வருகிறார்கள். ஆசியாவில் முக்கால்பாகம் ஐரோப்பியர்களது. அரேபியா, பெர்சியா, சீனம், ஆப்கானிஸ்தானம், ஸையாம், ஆசிய தேசங்கள் தாம் இவர்கள் ஆளுகைக்கு உட்படாமலிருக்கின்றன. இவற்றைத்தவிர சில செல்வத்திலும், விஸ்தீரணத்திலும் சிறிய தேசங்களாகிய, நேபாளம், பூதானம் கொரியா. முதலியன இவர்களுக்குட்படாமலிருக்கின்றன. ஆனால் இவையெல்லாம், வியாபாரசம்பந்தமானவும் இன்னும் சில விஷயங்களையும் பற்றி ஐரோப்பியர் சொன்னதையே கேட்கும்படி நேருகிறது.

இங்ஙனிப்படி யிருக்க, நமது ஆசியாகண்டத்தின் கீழ்ப்புரத்திருக்கும் தீவான ஜப்பான் என்னும் ஒரு சிறுநாடு மாத்திரம், மற்றை நாடு போலல்லாமலிருக்கிறது. இந்நாடானது சென்னை ராஜதானியை விடச்சற்றுப் பெரியதானது.

ஜப்பான் 161,556 சதுரமைல் 43,760,815 ஜனத்தொகை
சென்னைஇராஜதானி 134,082 ,, 38,623,066 ,,

ஜப்பானது சீதோஷ்ணம் நமது சென்னை ராஜதானியை விடக் குளிரிலும் வெயிலிலும் அதிகமாகவே யிருக்கும்.

ரெயில்-சென்னை இராஜதானியில், சுமார் 300. மைல், ரெயில் பாதை யிருக்கின்றது. ஜப்பானில், 5830 மைல் ரெயில்பாதை யிருக்கின்றது.

ஜப்பான் அரசாட்சியைப் பற்றி பின்பு பேசுவோம்.

வரி. நிலம், வரும்படி, வியாபாரம், வண்டி இவற்றின் பேரில் வரி போடப் பட்டிருக்கிறது. பட்டணத்துக் கருகாமையிலுள்ள நிலங்களின் வரும்படியில, நூற்றுக்கைந்து வீதம் வரி வாங்குகிறார்கள். கிராமங்களிலுள்ள நிலங்களின் வரும்படியில், நூற்றுக்கு மூன்றரை வீதம் வரி வாங்குகிறார்கள். வருஷத்துக்கு 450 ரூபாய்க்கு மேல் வரும்படி வரி (Income-tax) வாங்குகிறார்கள்; இதற்கு நூற்றுக் கொன்று வீதம் வரி. வரும்படி அதிகமாக அதிகமாக வரியும் அதிகமாகிறது, 150,000 வரும்படிக்கு நூற்றுக்கு ஐந்தரை வீதம் வரி கொடுக்க வேண்டும். வியாபாரத்துக்கு ஆயிரத்துக்கு ஒன்று வீதம் வரி வாங்குகிறார்கள். ஸ்டாம்பு ரிஜிஸ்ட்ரேஷன் வரிகளும் உள.

கல்வி. ஜப்பானிற் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் படிக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் ஆறு வயதான வுடனே பள்ளிக்கூடத்துக்கனுப்ப வேண்டும் 1898-ம் வருஷத்தில், 4,062,418 குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் வாசித்துக் கொண்டிருந்தன.

பள்ளிக்கூடங்களின்	கணக்கு.	சிலவு.	மாணாக்கர்கள்.
ஆரம்பப்படிப்பு ...	26,322	25,812,426 ரூ.	4,527,386
கிண்டர்கார்டன் *	174		15,000
மிடில் ஸ்கூல்	169	3,126,789 ரூ.	49,684
ஹைஸ்கூல்	6		4,664
ஸ்பெஷல் ஸ்கூல்	6		

* சித்திரம் முதலியன வைத்து குழந்தைகளுக்குப் படிப்புக் கற்பிப்பது.

டெக்னிகல் ஸ்கூல்†	74	527,130 ரூ.	6112
நார்மல் ஸ்கூல் ‡	35		7,800 ஆண்.
	12		1,100 பெண்.
ஸர்வகலாசங்கங்கள்	2		3,175
ராஜாங்கத்தாரே வைத்துக்கொள்ளாமல், நாட்டோர் வைத்துப் பரிபாலிக்கும் பாடசாலைகள்	‡1,600		மாணுக்கர் 149,230

நாட்டின் செல்வம்.

தேசம்.	வரும்படி.	சில்வு.
இந்தியா	*£ 40,786,698	£ 38,212,075.
ஜப்பான்	£ 4,135,123	£ 4,000,000?

ஜப்பானின் விஸ்திரணம் இந்தியாவில் ஒன்பதிலொருபங்கு.

தேசம்.	வரும்படி.	மூலம்.
இந்தியா	£ 16,444.825	நிலவரி.
ஜப்பான்	£ 1,333,218	

இந்தியாவின் பாதிபாகம் சாகுபடிசெய்யப்படாமலிருக்கிறது. இந்தியாவின் மொத்த விஸ்தீரணமாகிய 54 †† கோடி ஏகராவில் 23 கோடி ஏகராதான் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. 6 கோடி ஏகரா காடாயிருக்கிறது. 13 கோடி ஏகரா சாகுபடிக்கே பயன்படாது. போக 12 கோடி ஏக்ரா சாகுபடிக்குப்பயன்படுமாயினும் சாகுபடி செய்யப்படாமலிருக்கிறது. ஜப்பானிலோ, 4½ கோடி ஏகரா சாகுபடிசெய்யப்படுகிறது. அதாவது இந்தியாவில், ஜப்பான் ஒரு ரூபாய்வாஙகுமிடத்து. இரண்டரை ரூபாய் வரி வாங்குகிறூர்கள்.

ஜப்பானியர்கள் பௌத்தமதத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் வெள்ளைத்தோலுடையவரல்லர். நம்மைவிடக் கொஞ்சம் மஞ்சள்

---

† இவ்விடங்களில், ரசாயனம், கைத்தொழில், பிரகிருதிசாஸ்திரம, வியாபாரம், கப்பலோட்டல்,சித்திரமெழுதுதல்,வைத்தியம், மின்சாரசாஸ்திரம்,முதலியன கற்பிக்கப்படுகின்றன.

‡ பாடஞ்சொல்லிக கொடுக்கும விதத்தைக் கற்பிக்குமிடம.

* £. ஒரு பவுன் அல்லது பதினைந்து ரூபாயைக் குறிக்கின்றது.

ஒரு நில அளவு.

வர்ணத்தை யுடையவர். நம்மைப்போன்று அவர்களுக்குத் தலையில் குடுமி யுண்டு.

இதுவரையில் ஜப்பானைப்பற்றிய சில முக்கியமான விஷயங்களை யெடுத்துச் சொன்னோம். இனி, ஜபபான் உலகத்திலுள்ள மற்ற நாடுகளைப்போ லல்லாமல், உயர் பதவியடைந்த விதத்தைப்பற்றி யெடுத்துக் கூறுவோம.

1867-ம் வருஷம் வரை ஜப்பானிய ராஜ்ஜியம் மற்ற கீழ்நாடுகளைப்போல ஆளப்பட்டுவந்தது. அரசன் நினைத்ததையெல்லாம் செய்யலாம். அரசனுக்குக் கீழுள்ள சிற்றரசர்களெல்லாரும் அவவளவு அதிகாரத்தை வகித்தார்கள். அநேகமாய் இவர்கள் மூடர்களாக விருந்தார்கள். இவர்களுக்குக் கீழிருந்த துர்ஜனங்கள் தாங்கள் நினைத்தவை யெல்லாவற்றையும் தங்கள் எஜமானர் பெயரை வைத்துச செய்துகொண்டிருந்தார்கள். மேலும் ஐரோப்பா தேசத்தார் சாமான்களைக் கொண்டுவந்து விற்று நாட்டின் பொருளையெல்லாம் அபகரித்துக் கொண்டுபோய்க் கொண்டிருந்தார்கள். மேலும், மற்ற முன்னுக்குவந்த ஐரோப்பிய நாடுகளைப்பற்றி சிலர் தெரிந்தவர்களாக விருந்தார்கள். இன்னமும், கன்ப்யூஷியஸ்*, பௌத்தர் இவர்களுடைய மதத்தையும் சாஸ்திரத்தையும், ஜனங்கள் அதிகமாக வாசிக்கத் தொடங்கினார்கள். மற்ற கீழ்தேசங்களைப் போன்று அரசன் தேவாம்சமென்றும், அவனை ஒரு காரணத்தாலும் ஒன்றுஞ் செய்யக்கூடாதென்றும், இத்தேசத்திலும் இருந்தது. இச்சமயத்தில், பௌத்தமதத்தை நன்றாக வாசிக்கத் தொடங்கியதால், சிற்சில விஷயங்கள் ஜனங்கள் மனதிற்கெட்டின. "சரியானவரசர்கள் தாம் தேவாம்சமென்றும், அரசாங்கத்தின் குறி ஜனங்களின் நன்மையென்றும், ஜனங்களின் நன்மையை உத்தேசித்து இராஜ்ஜியபாரம் பண்ணாவிடில், அவனை பட்டத்தினின்றும் நீவிடக்கவேண்டுமென்றும், அறிந்தார்கள். மேலும்,நாளாகநாளாக ஐரோப்பியர்களெல்லாம் வந்து குவியத்தொடங்கினார்கள். ஜனங்களுக்கு அரசனாலும் அவன் மந்திரிகளாலும், தங்களைக் காப்பாற்ற முடியவில்லையென்ற வெண்ணம் விழுந்தது.

* சைனா தேசத்திலிருந்த ஒரு பெரிய தத்துவசாஸ்திரி.

உடனே இந்த வலியற்ற வரசாங்கத்தைத் தொலைக்கவேண்டு மென்று ஐம்பத்தைந்து பெயர்கள் சபை கூடினார்கள். அவர்க ளுக்கு உத்தியோகமில்லை; பொருளதிகமில்லை; அதிகமாய் மரியா தையும் கிடையாது. எல்லோரும் சராசரி முப்பது வயதுக் குட்பட்டவர்கள் தாம். இவர்கள், இருக்கும் அரசாங்கத்தை நீக்க, ஒரு சபைகூட்டி, படித்தவர்களும் யோக்கியர்களு மானவர்களைக் கொண்டு அரசாட்சி செய்யச் சொல்லிச் சக்கரவர்த்தியை கட்டாயப டுத்துவதாக நிச்சயஞ் செய்தார்கள்.

'அரசன் தேவாம்சம்; அவன் பிரதிநிதிகளும் தேவாம்சம்; ஆத லின் அவர்கள் எப்படிக்குடிகளை வருத்தினாலும் குடிகள் பொறுத் துக் கொண்டிருக்க வேண்டியது தான்' என்றவெண்ணம் எல்லாக் கீழ்தேசத்து நாட்டாரிடமு மிருந்தது. ஜப்பானியர் இவ்வெண்ணம் பிசகென்பதை முதலிலறிந்து கொண்டார்கள். பின்னும், அவர் அவ ர் ஊர்களின் அரசாட்சியை அவரவரே செய்துகொள்ள வேண்டு மென்றும், அவ்வவ்வூர் பணத்தை அவ்வவ்வூருக்காகவே செலவழிக்க வேண்டு மென்றும், நிச்சயம்பண்ணிக் கொண்டார்கள். இது வரை யிலும், அவ்வவ்வூர்ச் சிற்றரசன் அவ்வூரில் வரி வசூல்செய்து, தன் னிஷ்டப்படி செலவழித்துக் கொண்டிருந்தான். அவனூரில் அவனை ஏனென்று கேட்பாரெவருமே யில்லை. ஊரைச்சீர் திருத்த வேண்டு மென்று எண்ணங்கொண்டு உழைத்த சிறுவர்களோ, பொருளும் மரியாதையு மற்றவர்களாக விருந்தார்கள். ஆதலின், தங்கள் காரி யத்தைச் சாதித்துக்கொள்ள முடியாதவர்களா யிருந்தார்கள். இவர் கள் ஷிமாஸூ, சோஷியு, டோசா, ஹைசன், ஆகிய நான்கு ஊர்களின் சிற்றரசரை என்னவாகவோ கரைத்து, "சக்கிரவர்த்தியிடம் தம் நாட்டை ஒப்புவித்து, அதைச் சீர்திருத்த வேண்டுமென்று கேட் டுக்கொள்ளச் சொன்னார்கள். இந்நான்கு சிற்றரசர்களும் நிரம்பப் படித்தவர்கள்; நாட்டின் இழிநிலைமையைக் கண்டு பரிதவித்து, இவ் விதம் செய்தவர்கள். இவர்கள் மற்றவர்களைப் போன்று நிஜமாகவே தம்மிஷ்டப்படி அரசு செலுத்தியவர்தாம். ஆதலின் இவர்கள் செய் கை வியக்கத்தக்கதே. இவர்கள் செய்ததைப்பார்த்து மற்ற சிற்றர சர்களில் அநேகர் இவ்விதஞ் செய்தார்கள்.

அப்புறம் சிலசட்டங்கள் புதிதாய்ச் செய்யப்பட்டன. சிற்றரசர்கள் அவ்வூர்களுக்கு *அதிகாரிகளானார்கள். கயாடோ† வென்ற ஊரில் ஒரு அரசாங்கசபை யேற்பட்டது. இப்பொழுது அதிகாரிகளாயின சிற்றரசர், தங்கள் ஊரின் வரும்படியில் பத்திலொருபங்கு தங்களுடைய சம்பளமாக வெடுத்துக்கொண்டார்கள்.

இப்படிச்செய்தது சக்கிரவர்த்திக்கென்றும் இலாபமாயில்லை. ஆதலின், 1871-ம் வருஷத்தில், சக்கிரவர்த்தி எல்லா அதிகாரிகளையும் தள்ளிவிட்டு, வரிமுழுவதும் தன்னிடம் வந்து சேரவேண்டுமென்று விதித்தார்; எல்லாவதிகாரத்தையும் தன்கைக்குள்ளேயே வைத்துக்கொண்டார். இவ்விதம் அநேகம் புதுசட்டங்கள் செய்யப்பட்டன.

இஃதிப்படியிருக்க சீர்திருத்தத்தை மேற்கொண்டவர்களுக்குள்ளேயே கலகமாரம்பித்தது. இச்சிறுவர்களுக்குள் ஒருவர் சொல்லுவதை மற்றொருவர் கேட்பதில்லை. பழக்கமில்லாமலும், ராஜ்ஜிபாரத்திற்காவது, சீர்திருத்தத்திற்காவது வேண்டிய வளவு படிப்பில்லாமலு மிருந்தவர்கள் இராஜ்ஜியபாரம் செய்யத்தொடங்கினார்கள். இருக்கும் இராஜ்ஜியத்தை அழிப்பது ஒருபெரியகாரியமல்ல, அப்புறம் புதிதாயொரு அரசாட்சி உண்டாக்குவதுதான் பெரிது. சிலர் சக்கிரவர்த்தி புதிதாய்ச்செய்த சட்டங்கள் நாட்டின் நன்மைக்காகத்தானென்றும், அரசன் ஒருசபையை வைத்துக்கொண்டு ராஜ்ஜியபாரஞ் செய்யப்போகின்றானென்றும் நினைத்தார்கள். அப்படியே சபையொன்று ஏற்பட்டது. ஆனால், அச்சபைக்கு அதிகாரமொன்றுமேயில்லை. இரண்டுதடவை அச்சபைகூடிற்று. உடனே அக்சபை தானாகவே கலைந்தது.

இதற்குள்ளே கோரியா§ வுக்கும் ஜப்பானுக்கும் பொதுவாயிருந்த சிலவிஷயங்களைப்பற்றி நிர்ணயிக்கவேண்டியிருந்தது. பதி

* Governor.

† அப்பொழுது ஜப்பானின் பிரதானபட்டணம். இப்பொழுது டோகியோ பிரதானபட்டணமா யிருக்கிறது.

§ ஆசியாகண்டத்தின் வடமேற்கிலுள்ள ஒரு பௌத்த விராஜ்ஜியம். இது இதற்குமுன் சீனராஜுகைக்குள்ளிருந்து இப்பொழுது தனி ராஜ்ஜியமாகிவிட்டது.

றாம் நூற்றாண்டில் கொரீயாவானது ஜப்பானியர்களால் படையெடுக்கப்பட்டது. அதுமுதல் அவர்களே அந்நாட்டை யாண்டு வந்தபடியால், வருஷாவருஷம் சிற்சிலபரிசுகளை அந்நாட்டை யாண்டுவந்தவர்கள் ஜப்பானுக்கனுப்புவது வழக்கம். இப்பொழுது அவர்கள் அவ்வழக்கத்தை நிறுத்திவிட்டார்கள். அதனால் வெகுபேயர்களுக்குக்கோபம் வந்துவிட்டது. ஸைகோ என்று ஒருதலைவர் சண்டைபோடவேண்டுமென்றார்; சண்டைபோட்டால் தான் நாட்டுக்கேபெருமை வருமென்றார். அரசாங்கம் மிகவும் மெலிந்ததாயிருந்தது; நல்ல சைனியமே கிடையாது. ஆதலின் சண்டைபோட முடியாதென்று தீர்மானித்து விட்டார்கள். ஸைகோ அவர்கட்சியைசேர்ந்த மற்றமூன்று மந்திரிகளும் ராஜிநாமாகக்கொடுத்துவிட்டார்கள். இதனாலே ஒருகலகம் கூடநேரிட்டது; ஆனால் அது உடனே அடக்கப்பட்டது. இடகாகீ என்ற இன்னொரு மந்திரி ஒருபுதிய அரசாங்கச் சபை ஏற்படுத்த வேண்டுமென்றார்; அதில்பாதி உத்தியோகஸ்தர்களும் பாதிநாட்டுத் தலைவர்களும் இருக்கவேண்டுமென்றார். அவர் சொல்லுவதை அப்பொழுது கேட்பார் ஒருவருமில்லை.

மேலேபோவதற்கு முன்னம், ஜப்பானிய நாட்டின் அபிவிருத்தியைக்கருதி உழைத்தவர் 55-பெயர்களுள், சிலமுக்கியமானவர்களைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறது. அவர்களில முக்கியமானவர்கள். ஐவகூரா, ஸான்ஜோ, ஸைகோ, அகூபா, கைடோ; இவர்களுக்கு அடுத்தபடி, (1) ஐடோ; இவர் அப்பொழுது இளம்பிராயத்தவரா யிருந்தபடியினால், இவர் முதன்மையானவராயில்லாமலிருந்தார்; ஆனால், இவர்தான் பின்னிருந்து அநேகமாய் எல்லாக்காரியங்களையும் செய்தார்; சிலவருஷங்களுக்குமுன் ஜப்பான் நாட்டுப் பிரதான மந்திரியாயிருந்தார்.

(2) ஐனொயூயீ; (3) ஆகூமா இவர் நிரம்பப் புத்திகூர்மையும் படிப்பும், வாக்சாதுர்யமும் பொருந்தியவர்; (4) இடகாகீ. இவர்களெல்லாரையும்விட இப்பொழுது ஸைகோ என்பவரை நாம் நன்றாயறிய வேண்டும். நிரம்ப மேன்மையும், நற்குணமும் பொருந்திய அவரிடம் அளவிலாத ஆசை குடிகொண்டிருந்தது. ஆனால், தான் முன்னுக்குவருவதுடன் நாடும் முன்னுக்கு வரவேண்டுமென்ற வாசை கொண்டிருந்தார். முதலில் சாடஸ்மா என்னும் சிற்றரசு தனக்குக்

கிடைக்குமென்று நினைத்தார். பிறகு அவ்வாசையைக்கூட விட்டுவிட்டு, எப்படியாயினும், ஐரோப்பிய உபத்திரத்தினின்றும் தன் நாட்டை நீக்குவிக்கவேண்டுமென்று முயன்றார்.

கிறிஸ்தவப் பாதிரிகளைப்பற்றித் தெரிந்துகொள்ளாதவர் யாவர்? இவர்கள் மற்ற நாடுகளுக்குச் சென்றதுபோல, ஜப்பானுக்கும் சென்றார்கள். கிறிஸ்தவப் பாதிரிகளும், வியாபாரிகளும் ஊருக்கு முதலில் வந்தபொழுது, ஜப்பானியர்கள் அவர்களை முழுவதும் நம்பினார்கள். அதனால், ஒரு உடன்படிக்கைக்கு ஒப்புக்கொண்டார்கள். அவ்வுடன்படிக்கையின்படி ஜப்பானியர்களுக்கு அநேகம் கெடுதிகள் உண்டாயின. முதலாவது ஐரோப்பியர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும், ஜப்பானில் ஏதேனும் விவாதம் வந்தால, ஜப்பானியர் அதைத் தீர்ப்பதற்கு அதிகாரமில்லாமற் போய்விட்டது. இதனால் உண்டாயிருக்கும் கெடுதிகளைப்பற்றி நாமே யோசித்துக்கொள்ளலாம். அங்குவந்திருந்த ஐரோப்பியர்கள் நினைத்தப்படி காரியங்கள் செய்யத்தொடங்கினார்கள், மேலும், ஒருவிதமாகவும், ஐரோப்பியர் மேல் வரிபோட முடியாமற் போய்விட்டது அவ்வுடன்படிக்கையை மாற்றி சில சாதகங்கள் செய்விக்கவேண்டுமென்று பலதடவை ஜப்பானியர்கள் கேட்டுக்கொண்டும், ஐரோப்பியர் அதைக் கவனிக்கவில்லை. இங்கிலீஷ்காரனொருவன் ஜப்பானியனொருவனை அடித்தாலும, வைதாலும், கொன்றாலும், கேள்விமுறையே கிடையாது. இப்படிப்பல அநியாயங்கள் நடந்துகொண்டிருந்தன. ஜப்பானியர்கள் ஏதேனும முறையிட்டுக்கொண்டால், அவர்கள் வையப்பட்டார்கள். அவர்களுக்கு நாகரீகம் தெரியாதென்றும், கல்லைவைத்துப் பூஜைசெய்யு மூடரென்றும், இன்னும் அநேகவிதமாய் வைதுவிட்டு ஐரோப்பியர் சும்மாவிருந்து விடுவார்கள். கடைசியாய், கிறிஸ்தவப் பாதிரிகள் தங்கள் காரியங்களைச் சாதித்துக்கொள்ள இன்னவைதான் செய்தார்களென்று எடுத்துரைக்க முடியாது.

இத்துக்கங்களையெல்லாம் நிவர்த்தி செய்விக்க வேண்டுமென்று ஜப்பானிய பிரஜைகள் அரசாங்கத்தாரை வேண்டிக் கொண்டார்கள். அரசாங்கமோ யாதுஞ் செய்யச் சக்தியற்றிருந்தது. உடனே ஸைகோவுக்கும் அவன் கட்சிக்காரருக்கும், எப்படியாவது இப்பொ

ழூதிருக்கும் அரசாங்கத்தைத் துலைத்தாற்றான்; நாட்டுக்கு நன்மையுண்டாகுமென்று தோற்றிற்று. உடனே தம்மூராகிய சட்சூமாவுக்குப்போய், தமது பொருள், பெருமை, தம்முடைய சிநேகம் இவற்றையெல்லாங்கொண்டு ஒரு பெரிய சைனியம் சேர்க்கத் தொடங்கினார். இச்சந்தர்ப்பத்தில், நாம் அறிந்துகொள்ள வேண்டியதென்னவென்றால்; சட்சூமா தவிரமற்ற ஊர்களிலெல்லாம், ஜப்பானிய வழக்கங்களெல்லாம் மாறி, ஐரோப்பிய வழக்கங்களை கடைபிடிக்கப்பட்டன. ஒவ்வொரு நாடும் தத்தம் பூர்விக ஆசாரங்களைச் சற்றுச் சற்றுச் சீர்திருத்திக் கொண்டாலொழிய முன்னுக்கு வராது; ஆனால், முழுவதும் தம் வழக்கத்தை விட்டுவிட்டு, பிற வழக்கத்தை அநுசரிக்கும் வரையில், அந்நாடு உருப்படாது. ஆதலின், சட்சூமாவிலிருந்தவெல்லோரும், மற்றைய நாட்டோருக்கு இவ்விஷயத்தில் விரோதிகளாயிருந்தார்கள். மற்றைய நாடுகள் அரசாங்கத்தைச் சார்ந்தவையானதாலே, யுத்தவிஷயத்தில் கூட ஐரோப்பிய வழக்கத்தை அநுசரித்து வந்தார்கள். சட்சூமா மாத்திரம, ஐரோப்பிய வழக்கங்களைச் சற்றுச்சற்று எடுத்துக்கொண்டாலும், தம்பிராசீன வழக்கங்களை விடவில்லை. ஆதலின், ஸைகோவுக்கு இது மிகவும் அநுகூலமாகவே யிருந்தது.

இச்சமயத்தில், ஜப்பானுக்குச் சற்று தூரத்துக் கப்பாலிருந்த சீனாவுக்குட்பட்ட பார்மோஸா வென்னுந் தீவில், சில ஜப்பானியர்களை அவ்வூரார்கள் மிகக்கஷ்டப்படுத்தி விட்டார்கள். இதற்காக, சீனாவைக் கூப்பிட்டு அவ்வூராரை அநேகம் தடவை தண்டிக்கும்படி கேட்டுக்கொண்டும, சீனா அரசாங்கத்தார் அதைக்கவனியாத படியால்; முதலில், ஜப்பான் பார்மோஸாவைப் படையெடுக்க ஆயத்தமாயிருந்து, கடைசியாக வேண்டாமென்று சொல்லிவிடவே, ஜப்பானிய அரசாட்சி மேலே கோபம் பின்னும் அதிகரித்தது.

1875 - ம் வருஷத்தில், கொரியாவோடு அவசியமாய்ச் சண்டைபோடும்படி நேர்ந்தது. ஏனெனில், சும்மாப்போய்க்கொண்டிருந்த ஜப்பானிய படவின்மேல், சில கொரியர்கள் சுட்டுவிட்டார்கள். ஜப்பான் உடனே ஒரு பெரிய கப்பற்கோலம் தயார் செய்து, ஒரு சிறிய படவுக் கூட்டத்தை கொரியாவைப் படையெடுக்கவேண்டியனுப்பவே, கொரியா பயந்தது, உடனே ஒரு உடன்படிக்கையொன்று

செய்யப்பட்டது. ஆனால், ஜப்பானிய பிரஜைகள் இதை ஒப்புக் கொள்ளவில்லை. முதலாவது ஒரு சிறிய நாட்டைத் தனக்குச் சமமாக ஜப்பான் பாவித்தது பிசகு; இரண்டாவது, தன்னை அவமானப் படுத்தின நாட்டுடன் உடன்படிக்கையே உதவாது. இவ்விஷயம் பின்னும் ஜப்பானிய பிரஜைகளுக்கு அரசாங்கத்தின்மேலிருந்த வெறுப்பை அதிகரித்தது.

1876-ம் வருஷத்தில், இரண்டு சட்டங்கள் செய்யப்பட்டன. அவை யென்னவென்றால்; (1) ஒருவரும் வாள் வைத்துக்கொள்ளக் கூடாதென்பதும்; (2) நாட்டினின்றும் சிலர் வாங்கிக்கொண்டிருந்த விரும்படியை நிறுத்திவிடவேண்டுமென்பதும். இதனால் அநேகம் சிறு கலகங்கள் உண்டாயின. கடைசியாய், சட்சூமாவிலுள்ளவர், ஸைகோவின் தலைமைக்கீழ் கலகத்தைத் தொடங்கினார்கள்.

ஸைகோவின் கலகத்துக்குக் காரணங்களை ஒவ்வொன்றாக முன்னமே எடுத்துக் கூறினோம். ஆதலின், பலமற்ற வரசாங்கத்தைத் தள்ளி, ராஜ்ஜியத்தைப் பலப்படுத்த நான்கு வருஷங்களாக முயற்சி செய்துகொண்டிருந்தான். முப்பதினாயிரம் வீரர்கள் ஸைகோவின் கீழிருந்தார்கள்.

1877 - ம் வருஷம் ஜனவரி௴ 29உ ஆரம்பித்து, செப்டம்பர்௴ 24உவரை யுத்தம் நடந்ததில், கலகவீரர்களெல்லாம் இறந்தார்கள் இவ்யுத்தத்தினால் ஒன்றும் பயனில்லாமற்போனாலும் ஜப்பானியர் யுத்தஞ்செய்ய யோக்கியதை யுள்ளவாதா மென்பது வெளியாயிற்று.

யுத்தம் முடிந்தவுடனே, அரசாங்கத்தார் ஐரோப்பிய வழிகளை ப்பின்னும் அதிகமாக அநுசரிக்கத்தொடங்கினார்கள். இப்பொழுது, தலைமையை வகித்தவர்கள் தலைமையை வகிக்கத்தக்க யோக்கியதையுள்ளவர்கள் தாம். அவர்களெல்லோரும் ஐரோப்பா, அமெரிகா, முதலிய தேசங்களுக்குச் சென்று அத்தேசங்களை நன்றாயறிந்தவர்கள். ஆனால், அரசாங்கத்தார், வெகு வேகமாய்ச் சீர்திருத்தங்கள் செய்யத்தொடங்கினார்கள். புகைவண்டிப்பாதை, தந்தி, கப்பல் நெறிகாட்டும் வெளிச்சம், சண்டைகப்பல் முதலியனசெய்து

அவற்றைப் பார்த்துக்கொள்ள இங்கிலீஷ் காரர்களை நியமித்தார்கள்; சட்டங்களைச்சீர்திருத்தி, சைனியத்தைச் சரிப்படுத்துவதற்கு பிரென்சுக்காரரை நியமித்தார்கள். தபால் முதலியன அமெரிக்க தேசத்தாரிடம் ஒப்புவிக்கப்பட்டன. வைத்திய சாஸ்திரம் வியாபாரநீதி, அவ்வவ்வூரார்கள் அவ்வவ்வூர் விஷயங்களை நடத்திக்கொள்ளும் விதம், ராணுவ உத்தியோகஸ்தர்களுக்குப் படிப்பு முதலியன ஜெர்மனியர்களாற் கற்பிக்கப்பட்டன. சிற்ப சாஸ்திரம், ஓவியம் இவ்விரண்டும், இடாலியர்களைக் கொண்டு கற்பிக்கப்பட்டன. இப்படியிருக்கும் தருணத்தில் ஜப்பானியர்கள் தம்மூர் வழக்கத்தை எப்படி விடாது வைத்துக்கொள்ளுவது? அநேகர் மயிரைமாத்திரம், வழக்கம்போல வைத்துக்கொண்டார்கள். வெளியே போகும்பொழுது வெள்ளையர்கள் உடையிற் சென்றார்கள் வீட்டுக்குள்ளே வந்ததும் தம்முடையையே வைத்துக்கொண்டார்கள். வெள்ளைக்காரர்களைப் போன்றும் வீடுகட்டி, வீட்டைவைத்துக்கொண்டார்கள். சாராயம் முதலியன வெள்ளையர்களோடு கூடவே வந்தன. மேல்சொக்கா தொப்பி, கபால், முதலியனவற்றை வைத்துக்கொண்டாலும், தங்கள் வழக்கங்களில் அநேகத்தை விடாமலிருந்தார்கள்.

இன்னமும் வெகு சீக்கிரத்தில், வெள்ளையர்கள் பெருநாட்களாகச் சிரமப்பட்டுச் சம்பாதித்துக்கொண்டனவற்றையெல்லாம் சம்பாதித்துக் கொண்டார்கள்.

மேலே போவதற்குமுன், இந்தியாவுக்கும் ஜப்பானுக்குமுள்ள வித்தியாசங்களைப்பற்றிச், சற்று விவரிப்போம்.

ரா. ராஜமையங்கார்.

OPINIONS.

The Madras Mail :—Has the exceptional mer
being edited by two Indian graduates, who have had b
ant academical careers ... Excellent from the point of
of the contributions to its pages, of the general get up;

The Hindu :—They (Editors) seem to have sec
a good staff of contributors, many of them well-known
their learning and experience.................... presen
very good appearance

இந்து நேசன் :—இப்பத்திரிகைக்கு விஷயங்க ளெழுதா
கல்வித்திறமையிலும் சாஸ்திர வாராய்ச்சியிலும் அநுபவத்
சிறந்தவர்களா யிருக்கிறார்கள்.

PRINTED AT THE V. N. JUBILEE PRESS, MADRAS.